கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(05.01.2020 - 05 தை, 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 223, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2020

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



## நாசகார சக்திகளின் செயற்பாட்டினால் நாம் அழிந்து விடவில்லை

# ஆழமான ஆன்மீக பயணத்திற்கு உள்ளாகினோம்

**கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு திருப்பலியில் கர்தினால்...**



கத்தோலிக்கராகிய எமக்குள் இருக்கும் துக்கம், வேதனைகளைத் தாங்கும் பொறுமையின் பண்பை, எமது மக்கள் முழு உலகத்திற்கும் காண்பித்தனர்!

கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு திருப்பலியில் பாஸ்கு தாக்குதலினால் அங்கவீனம், நோயாளிகளான மக்களைப் பார்த்து, அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தமதுரையில் குறிப்பிட்டார்.

எமது தேவாலயங்களான கட்டுவாபிட்டி, கொழும்பு கொச்சிக்கடையிலும் நடந்த கொடூர கொலைச் சம்பவத்தை, பொறுமையாக வேதனை, துன்பங்களைத் தாங்கிக்கொண்டதினால் எமது மக்கள் தமது கத்தோலிக்க தன்மையை முழு உலகிற்கும் காண்பித்தனர்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## வரம் தருவாய் அம்மா

மாமரியே இறைவனின் தாயே!
மானிலம் போற்றும் மாதரசியே
அருள்வாய் உமது ஆசியை - இப்புதுவருடத்திலே
எமது எண்ணங்களும் தேவைகளும் நிறைவேற
வற்றாத வரம் தருவாய் - இப்புதிய ஆண்டிலே

தீராத நோயெல்லாம்
தீர்த்து வைக்கும் தாயே
நோயின்றி வாழ, துணை புரிவாய்
இப்புதிய ஆண்டிலே
எமது நாடும், நாட்டு மக்களும்
சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும்,
ஒற்றுமையிலும் இணைந்து மகிழ்ச்சியில் வாழ்ந்திட
இப்புத்தாண்டில் புதுவாழ்வுத் தாரும் அம்மா

## ஒய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகையின் குருத்துவ வாழ்வின் வைரவிழா!



ஓய்வுபெற்ற பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை குருத்துவம் பூண்டு 60 ஆண்டுகளின் நிறைவுத் திருப்பலி றாகமை, 'எம்மவுஸ்' ஓய்வு வதிவிட இல்லத்தில் நடைபெற்றது. கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் துணை ஆயர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற திருப்பலியின் மறையுரையில், பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயராக 25 வருடங்களாக தொடர்ந்து பணியாற்றினார் என்றார். மறைமாவட்ட பொருளாளர், செயலாளர், மேலும் பல அருட்தந்தையர்கள் கலந்துகொண்டனர்.

## அறிவித்தல்

கொழும்பு உயர்மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தினால் நடத்தப்படும் மறையாசிரியர்களுக்கான ஞான ஒடுக்கம் (போயா கருத்தரங்கு) இம்மாதம் 10ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் கலந்து கொள்ளவும்.

**தகவல் : மறைக்கல்வி நடுநிலையம்**

## கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய நத்தார் நள்ளிரவுத் திருப்பலி



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய நத்தார் நள்ளிரவுத் திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. J.D. அந்தனி ஆண்டகை ஒப்புக்கொடுத்தார். அவர் தம் மறையுரையில் கல்வாரி மலையில்லாமல் எம்மால் பெத்லகேமைப்பற்றி சிந்திக்க முடியாது....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## ஞானார்த்த பிரதீப்பய எழுத்தாளர்களின் வருடாந்த புத்தக நிகழ்வு



ஞானார்த்த பிரதீப்பய எழுத்தாளர் கருத்துக் களத்தினூடாக ஒழுங்கமைக்கப்பட்ட வருடாந்த கத்தோலிக்க புத்தக நிகழ்வில், தமது படைப்பை முன்வைத்த எழுத்தாளர்களுக்கு நிதி வழங்கல் நிகழ்வு, கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனரும் ஞானார்த்த பிரதீப்பய பிரதான ஆசிரியருமான கலாநிதி அருட்பணி கமிலஸ் பர்னாந்து அடிகளாரினால் கத்தோலிக்க அச்சகத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் உதவி ஆசிரியர் திரு. சிரான் மைத்திரி அவர்களும் இணைந்து கொண்டார்.

**தகவல் : T. சுனில்**

**ஆண்டவரே, எல்லா இனத்தார்களும் உமக்கு ஊழியம் செய்வார்கள். (தி.பா 72)**

புதுவருட நல்வாழ்த்துக்கள்



# ஒளி விழா சிறப்புரை

**[கொழும்பு விபுலானந்தர் தமிழ் மகாவித்தியாலத்தில் நவம்பர் 27ம் திகதி நடத்தப்பட்ட ஒளி விழாவில் அருட்தந்தை கலாநிதி ஜெராட் டீ றோசய்ரோ, அ.ம.தி. அவர்கள் ஆற்றிய சிறப்புரை]**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நினைவு விழாக் காணும் இவ்வேளை முதற்கண் ஈழத்திருமகன் விபுலானந்த அடிகளாரின் பெயர் கொண்ட இப்பாடசாலைச் சமூகத்திற்கு முதற்கண் என் வாழ்த்துக்களையும், உளம் நிறைந்த நன்றியையும் நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

இவ்விழாவை பாரம்பரிய தமிழ் சமய பண்பாட்டுப் பின்புலத்தில் பார்க்க விழைகின்றேன். காலையில் சூரிய உதய வழிபாடும், மாலையில் சூரிய மறைவு வழிபாடும் தமிழர் தம் இறையுணர்வை பாரம்பரியமாக உணர்த்திவரும் முறையாகும். பண்டைக்காலம் முதல் சூரிய வழிபாடு செய்த தமிழர், அதனைக் கடந்து இறையில் மனம் பதித்திட தூண்டுதல் பெற்றார்கள். அதன் விளைவாக, இறைவனை,

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானென தென்றவர வரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

என மாணிக்க வாசகர் போன்றோரை விழிக்கச் செய்தது. மேலும், இறைவன் மட்டும் விளங்கும் ஒளி கதிரவனொளி போன்றது. ஆயினும், அனைத்திருளும் நீக்கும் ஆற்றல் படைத்த இறைவன் பரவொளியாய், பரஞ்சோதியாய், பேரோளியாய், போற்றப் பெறுகிறான். உயிர்களிடம் காணப் பெறும் ஒளி கண்ணொளி போன்றது என்பதை உணர்ந்த தாயுமானவர் அடிகள்,

கண்ணொளியே மோனக் கரும்பே கவலையறப்
பண்ணொளிக்கும் எள்ளொளியாம் பான்மையினை எனப்

படிந்தார். மேலும், இறைவனின் தன்மையை அறிவதற்கு ஏதுக்களும், மெய்யறிவியல் வாத விளக்கமும் முக்கிய மானதாக கருதல்கூடாது சுடர்விடும் சோதியாக தன்னை அவன் வெளிப்படுத்தி நின்றான், இருளகற்றுகின்றான் என்ற தெளிவு முக்கியம் என்றார் ஆளுடைய பிள்ளையார்.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா, சுடர் விட்டுளன் எங்கள்
சோதி

இன்னும், உலகிற்கும் உயிர்கட்கும் ஓங்கு பரவொளியாகவும், உள்ளூறு சோதியாகவும் விளங்கும் இறைவன் அவற்றோடு எத்தகைய பிணைப்பில் நிற்கின்றான் என்பதனை உள்பொருளாய், அறிவுப் பொருளாய் அரியனாய், பெரியனாய் உள்ள இறைவன் உயிர்களுக்கு அண்மியனாய், அடியார்க்கு எளியனாய், அவர்களோடு நேர்த்தொடர்பு கொள்பவனாய் உள்ளான் என்பதை தமிழர் சமயம் பலபட விளக்குகின்றது. இவ்வாறு “இறைவன் ஒளியே” என்ற தெளிவு தமிழர் மனங்களில் சிறந்து நின்றது. இறையின் இயல்பையும், தன்மையையும் உள்ளவாறே உணர்த்துதற்கு இறைவன் ஒளிவடிவினன் என்ற கொள்கை துணை செய்தல் தெளிவாகின்றது.

தமிழ் கிறிஸ்தவர்கள் “இறைவன் ஒளியே” என்ற தமிழரின் இவ்விறை நம்பிக்கை கொள்கையின் அடிப்படையில் “நானே உலகின் ஒளி. என்னில் நம்பிக்கை கொண்டோர் இருளில் நடவார்” என்று மொழிந்த இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பை புரிந்துணர்வது, அவர் கொண்ட நம்பிக்கையை வளமாக்கும், ஆளமாக்கும் வழியாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பையும், தம்மவருடன் அவரது இருப்பையும் புனித யோவான் “உலகிற்கு வந்த ஒளியாவும், வாழ்வுதரும் அவ்வொளி மனிதருக்கு ஒளியாக இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது, இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை” (யோவா. 1:1-4) எனவும் எடுத்துரைக்கின்றார்.

இதனை தன் வாழ்வில் கண்டுணர்ந்தவர் புனித பவுல் அடிகளார். அவர் கிறிஸ்தவர்களை “அன்பர்களே நீங்கள் இருளில் நடப்பவர்கள் அல்ல, நீங்கள் எல்லாரும் ஒளியைச் சார்ந்தவர்கள், பகலில் நடப்பவர்கள்” (1தெச. 5:4-5) என விளிக்கின்றார். தமிழ் சைவ, தமிழ் கிறிஸ்தவ மாணவச் செல்வங்களும், ஆசிரியப் பெருந்தகைகளும், பெற்றாரும் ஒன்றிணைந்து “ஒளி விழா” காணும் இவ்வேளையில், இதுகார் யாம் கண்ட இறைநம்பிக்கையில் “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே (நடத்தையிலே) ஒளியுண்டாகும்” எனத் திடம் கொள்வதும், நாம் ஒளியைச் சார்ந்தவர்கள் எனத் தெளிவடைவதும் காலத்தின் கட்டாயமாகும். இன்று நாம் வாழும் சமூக சூழலில் வளர்ந்து வரும், வளர்க்கப்பட்டு வரும் சிந்தனைகள், வாழ்க்கைப் போக்குகள், விழுமியங்கள், நம்பிக்கை கோட்பாட்டுக் கூறுகள, பழக்க வழக்கங்கள் என்பன நம் சமய நம்பிக்கைக்கும் அதன் படிப்பினைக்கும் முரணானவையாகும். நம் பாரம்பரிய சமய பண்பாட்டு முறைகளுக்கு ஒவ்வாதவையாகும். அவை நம்மீது, குறிப்பாக இளையவர் உங்களை இலக்குவைத்து திணிக்கப்படுகின்றது. அவை நம் இருப்பை அழிக்கும் நோக்குக் கொண்டவையாகும்.

நம் உள்ளத்தில் ஒளி பிறந்தால் மட்டுமே, “பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி பெற” நாம் துணைபோகலாம். நாமும் ஒளியின் பிள்ளைகளாக, ஒளிபெற்ற ஒரு வாழ்வியலுக்கு வித்திடலாம். இது உங்களது போன்ற ஒரு தமிழ் பாடசாலை குடும்பத்தின் கடனும், கடமையும், கடப்பாடுமாகும். இன்றும், நாளையும், மறுநாளும் இக்கடனை நிறைவேற்றிட நீங்கள் ஒன்றிணைந்து ஒளியில் பயணித்திட ஆசிநல்கி, நன்றி நவிந்து விடைபெறுகின்றேன். வணக்கம்!


# இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழு



இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் பொது அமர்வு கடந்த கார்த்திகை மாதம் 18ம் தொடக்கம் 21ம் திகதி வரை நீர்கொழும்பு போலவலான தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்த அமர்வின் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் இடப்பெற்றது. இந்த தெரிவில் நற்கருணைநாதர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. டிலான் பெர்னாண்டோ SSS பேரவையின் தலைவராகவும், புனித. டோமினிக் கன்னியர்கள் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி சிறிமா ஒப்பநாயக்க OP உப தலைவியாகவும், டிலாசால் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்சகோதரர் கிறிஸ்டி குருஸ் FSC பொருளாளராகவும், திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி தியோபின் HF, செபமாலைதாசர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. பிரான்சிஸ் ஜெயசீலன் CR, திருச்சிலுவைக்கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி றொபினா பவுலின் HC ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# இரத்தினபுரி மறைமாவட்ட செய்திகள்...

## மறைப்பாடசாலை மாணவர்களின் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்.







கடந்த 16.12.2019 அன்று மாணவர்களின் நத்தார் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு தொலஸ்வலை பங்கு அருட்பணி. ஜீவன்த அடிகளார், இரத்தினபுரி பாலர் இயேசு கன்னியர் மடத்தலைவி அருட்சகோதரி றோஸ் மெரீனா அவர்களும் வருகை தந்திருந்தனர். கூடவே பங்குத்தந்தை எனஸ்லி சுரங்க அடிகளாரும், உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ஜோய் அந்தோனிமுத்து அடிகளாரும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். பிரதம விருந்தினர்களை வரவேற்பதையும், சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

## மறையாசிரியர்களின் நத்தார் ஒன்றுகூடல்





கடந்த 14.12.2019 அன்று இரத்தினபுரி மறைமாவட்ட மறையாசிரியர்களின் ஒன்றுகூடல் இரத்தினபுரி மறைப்பணி நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். ஆயரவர்களை மறையாசிரியர்கள் வரவேற்பதையும், நிகழ்வினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், மறையாசிரியர்களுக்கு ஆயரவர் பரிசில்கள் வழங்குவதையும் படத்தில் காணுகின்றோம்.

## இளைஞர்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்



கடந்த 21ந் திகதி சனிக்கிழமையன்று இரத்தினபுரி மறைமாவட்ட இளைஞர்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் இரத்தினபுரி மறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இதனை இரத்தினபுரி மறைமாவட்ட குடும்ப நல அபிவிருத்தி திட்ட இயக்குனரும், இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனருமான அருட்பணி நிரோஷன் வாஸ் அடிகளார் ஏற்பாடு செய்து நடத்தினார். இளைஞர்களுடன் மிக மிக சுமுகமாக பேசும் பழகும் திறமை கொண்ட, அவர்களை நல்வழி நடத்தும் ஆற்றல் கொண்ட அருட்தந்தை இளைஞர்களுடன் சுமுகமாக கலந்துரையாடிக் கொண்டிருக்கும் நிகழ்வை காணுகின்றோம்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
05 தை, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# "புதிய ஆண்டிலே இறைவன் நமக்கு தரவிருக்கின்ற ஆசீரை பெற்று வாழ்வோம்."

ஊரெங்கும் உற்சாக கோலாகலம்! நள்ளிரவு வானத்தை ஒளிமயமாக்குகின்ற வாணவேடிக்கைகள்! ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள்! இத்தனை கொண்டாட்டங்களுக்கும் காரணம், புத்தாண்டுப் பிறப்பு! ஆம்! புதியதொரு ஆண்டு பிறக்கின்றது. பழைய ஆண்டு ஒன்று முடிவடைந்து, சுற்றமும் நட்பும் சூழ நாம் மகிழ்ந்து கொண்டாட வேண்டிய நேரம் தான். கொண்டாட்டங்களோடு கூட, இதுநாள் வரை நாம் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கவேண்டிய வேளையும் இதுவே.

கடந்த ஆண்டிலே கடவுளிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளையும், புதிய ஆண்டிலே வரவிருக்கின்ற நலன்களையும் நன்றியோடு நினைத்து பார்த்திட சரியான தருணம், இந்த புத்தாண்டு பிறக்கின்ற நேரமே. நிறைவடைந்த ஆண்டில் நம்மோடு வழித்துணையாக வந்து எல்லா நிகழ்வுகளிலும் உடனிருந்து காத்த இறைவனுக்கு நன்றி சொல்வோம். கடந்த 365 நாள்களையும் சிறப்பானதாக ஆக்கித் தந்த உறவினர், நண்பர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுவோம். சென்ற ஆண்டில் நிகழ்ந்தவற்றில் வெற்றிகளும் இருக்கலாம் தோல்விகளும் இருக்கலாம். வெற்றிகளுக்கு உதவியாக இருந்தவர்களுக்கும், தோல்வியில் துணைநின்றவர்களுக்கும் தவறாமல் நன்றி சொல்லுவோம்.

"முன்பு நடந்தவற்றை மறந்துவிடுங்கள்; முற்கால நிகழ்ச்சி பற்றிச் சிந்திக்காதிருங்கள்; இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றிவிட்டது; நீ அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா? பாலைநிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன்; பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்". (எசா 43:18-19) என்ற கூற்றுக்கிணங்க கடந்த காலத்தில் நடந்தவற்றை பற்றி சிந்திக்காமல் வருங்கால வாழ்வை வளமானதாக்கிட, இப்போது நம்முன்னே இருக்கின்ற நிகழ்காலத்தில் நேர்பட வாழ்வோம். இறைமகன் இயேசுவோடு இணைந்து இருந்தோமானால், பழையவற்றை அகற்றி, புதிய பொலிவோடு நம் வாழ்க்கை அமைவது உறுதி.

எனவே, பழைய ஆண்டைக் கடந்து புதிய ஆண்டுக்குள் நுழைகின்ற இந்நேரத்தில், நாமும் பழைய நினைவுகளை, மனக்கசப்புகளைக் களைந்துவிட்டு, புதியதொரு வழிமுறையில் நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம். கடந்த காலத்தில் நம்மைக் காயப்படுத்திய நபர்களை, நிகழ்வுகளை மன்னித்து மறக்கவும், புதிய உறவுகளை கனிவோடு ஏற்றுக் கொள்ளவும் தயாராவோம். நமது வாழ்க்கைப் பாதையை சீரமைத்துக் கொள்வதற்கு இந்த புத்தாண்டு நமக்கொரு வாய்ப்பை தந்திருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம் புதிய ஆண்டிலே இறைவன் நமக்கு தரவிருக்கின்ற ஆசீரை பெற்று வாழ்வோம். அத்தோடு அன்னை மரியின் அடைக்கலத்தையும் நாடுவோம். அவர் இதுவரை எமக்காக தம் மகனிடம் பரிந்து பேசியவற்றுக்காக நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் எமக்காக பரிந்து பேசும் அன்னையிடம் புதிய ஆண்டிலே புதியதொரு வாழ்வை நிறைவான வாழ்வை எமக்குத் தரும் என மன்றாடுவோம்.

மேலும் இம்மாதம் இலங்கை நாட்டின் பாதுகாவலராம் புனித யோசேவாஸ் அடிகளாரிடம் எமது நாட்டையும், நாட்டு மக்களையும் ஒப்படைத்து பாதுகாத்து வழிநடத்தியருள மன்றாடுவோம்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**இறையாசீருடன் ஆசிரியர்**






புதுவருட நல்வாழ்த்துக்கள்

# தாய்மையின் பெருமை

"அன்னை மரியாள் எமது வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் இன்னலிலும் இனிய தாயாக விருந்து தயவுடன் விடியலைக் காண வழிகாட்டப் போகிறார்"

**ஆக்கம் :**
**அருட்சகோதரி. லூர்ட்ஸ் F.M.M**

தை பிறந்தால் வழிபிறக்கும் எனக் கூறுவார்கள். கத்தோலிக்கராகிய நாம் அன்னை மரியாளின் தாய்மையின் பெருமையைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம் 2020ம் ஆண்டு புத்தாண்டாகப் புலர்ந்துள்ளது. இவ்வாண்டை மரியன்னையின் கரங்களில் ஒப்படைத்து, அவளின் திருமகனை மண்டியிட்டு வணங்கி, அவரின் ஆசீரை எம்மேலும், எமது குடும்பங்கள் மேலும், எமது நாட்டிலும், அகிலமெங்கும், பெருமழையாகப் பொழிந்திட வரமளிக்க வேண்டுமென்று இறைஞ்சிடுவோம். எமது சொந்த நாட்டிலே புதிய அரசியல்வாதிகள் எமக்கு என்ன செய்வார்களோ ஏது நடக்குமோ என எண்ணி ஏங்கித் தவிக்கும் எமக்கு அன்னை மரியாள் எமது வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் இன்னலிலும் இனிய தாயாகவிருந்து தயவுடன் விடியலைக் காண வழிகாட்டப் போகிறார். அவள் எம் அன்புத்தாய் அன்னை மரியாள். எம் தாய் தன் தசையையும் குருதியையும் இறைமகன் இயேசு தன் உதரத்தில் உருவாகிட உடன்பட்ட அவள், தன்னை நாடி வரும் தனயர்களைக் கைவிடமாட்டாள் என்பது திண்ணம். அன்று கபிரியேல் தூதன் மரியன்னையை அணுகித் தெய்வமகன் உருவாகிட உம்மைக் கேட்கிறேன். உடன்படுவீரா? என வினவிய போது ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் நான் கணவனை அறியேனே என்றாள் தூதன் அமைதியாகத் தூய ஆவியின் வல்லமையால் உம் உதரத்தில் தெய்வத் திருமகன் இயேசு உருவாகுவார் எனப் பதிலுரைத்தார். அதை கேட்டதும் அன்னை மரியாள் ஆகட்டும் எனப் பதிலுரைத்தார். இவ்வாறு தன் உடலைத் தியாகம் செய்த தாய் மரியாளிடம் எம் வாழ்விலும் அடுத்தவர் வாழ்விலும் அக அமைதியைப் இப்புத்தாண்டில் வழங்கிட நாம் வரம்கேட்போம். எமது ஆதிப்பெற்றோர் ஆதாம் ஏவாளால் அழிவைப் பெற்றுக் கொண்டோம். சாபத்தைப் பெற்றுக்கொண்டோம். மரியாள் வழியாக ஆசீரைப் புதுவாழ்வைப் பெற்றுக் கொண்டோம். மீட்பை அடைந்துள்ளோம். பாவத்தில் படுத்துறங்கிய எம்மை எழுப்பி புதுப்பாதையைப் புதுவாழ்வைத் தந்த மீட்பை எமக்குத் தந்த அன்னை மரியாளை பாசத்துடன் அணுகி நன்றி நவிலும் நன்நாள் புத்தாண்டு தினமாகும். அன்னை மரியாளை அவமதித்து அசட்டை செய்யும் அடிப்படை வாதக்குழுக்கள் இப்புத்தாண்டில் மனம்மாறி மரியன்னையின் தாயன்பை உளமார உணர்ந்து புத்தொழி பெற்றுப் புத்தாண்டில் அன்னையை வணங்கி வாயார வாழ்த்திப் போற்றி ஓர் குலமாகக் குவலயம் போற்றக் கத்தோலிக்க மக்களாகிய நாம் இறைவனை வேண்டிடுவோம்.

# உண்மை உறைக்கும்



புதுவருட நல்வாழ்த்துக்கள்




# அன்னை மரியா இறைவனின் தாய்!

ஜனவரி 01

புதிய ஆண்டின் தொடக்க நாளிலேயே நமது தாயாம் திருஅவை (திருச்சபை) 'மரியா இறைவனின் தாய்' என்ற விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. நமக்கெல்லாம் தாயாக இருக்கும் இறைவன், ஆண்டின் முதல் நாளிலேயே நம் அனைவரையும் தன் தாயின் பராமரிப்பில் ஒப்படைக்கின்றார். ஏனென்றால் தாய்க்கு நிகர் தாய்தான். தாயென்றால் அன்பும், அரவணைப்பும், பண்பும், பாசமும், தியாகமும், இரக்கமும், கனிவும், கருணையும் நிறைவாகப் பெற்றவர்.

இன்று நாம் கொண்டாடும் அன்னை மரியா இறைவனின் தாய் என்ற விழா எப்போது? ஏன்? தொடங்கப்பட்டது? கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த கொன்ஸ்தாந்தி நோபிளின் ஆயராக இருந்த நெஸ்டோரியஸ் என்பர் 'மரியா இயேசுவின் தாய் தானே தவிர, இறைவனின் தாயில்லை" என்னும் புதுவாதத்தை முன்வைத்தார். மேலும் 'இயேசு ஓர் ஆள் அல்ல, அவர் இரண்டு ஆட்கள். ஒன்று இயேசு மனிதன், இன்னொன்று இயேசு கடவுள். அவரது போதனையின்படி இயேசு மரியாவிடமிருந்து பிறக்கும்போது சாதாரண மனிதராகத்தான் பிறந்தார். பின்னர் தம் வாழ்க்கை காலத்தில் கடவுளாக மாறினார்" என்ற தப்பறைக் கொள்கைகளைக் கூறி வந்தார்.



இதற்கு நம் திரு அவையிலிருந்து பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பின. இயேசு மனித இயல்பு, இறை இயல்பு ஆகிய இரண்டு இயல்பு களையும் கொண்டவர். இதற்கு எதிராகப் போதித்த நெஸ்டோரியஸின் போதனைகளைச் சரிசெய்ய மன்னர் தியோடோசிஸ் காலத்தில், அலெக்சாண்டிரியா ஆயர் சிரில் தலைமையில் திருச்சங்கம் கூட்டப்பட்டது. கி. பி. 431ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஏழாம்திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெற்ற எபேசு திருச்சங்கம் 'இயேசுவின் இறைத்தன்மையும், மனிதத் தன்மையும் முழுமையாகக் குடிகொண்டிருக்கின்றன. ஆகவே, மரியா இறைவனின் தாய்' என்ற நம்பிக்கைக் கோட்பாட்டை உறுதியிட்டுப் பிரகடனப்படுத்தியது. அதோடு நெஸ்டோரியஸ் மற்றும் அவரது கூட்டத்தையும் திருச்சபையை விட்டு வெளியேற்றியது.

கடவுளாகிய இயேசுவைப் பெற்றெடுத்ததால் 'கடவுளின் தாய்' என்று அழைக்கப்பட வேண்டும் என்று ஆணித்தரமாக அறிக்கையிட்டது. அது முதல் 'அன்னை மரி இறைவனின் தாய்' என்ற விழாவை நம் திருஅவைக் கொண்டாடி வருகின்றது. அன்னை மரியாவைப் பற்றிய எத்தனையோ நம்பிக்கைகள் நம்மிடம் இருக்கின்றன. ஆனால் மரியாவைப் பற்றிய அதிகாரப்பூர்வமான நான்கு கோட்பாடுகளே விசுவாசக் கோட்பாடுகளாக திருஅவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன....

1. மரியா இறைவனின் தாய், 2. மரியா என்றும் கன்னி 3. மரியா அமல உற்பவி, 4. மரியா விண்ணிற்கு எடுத்துச் செல்லப்பட்டவர்.

இந்த நான்கு விசுவாச சத்தியங்களில் முதன்மையாக இருப்பது 'மரியா இறைவனின் தாய்' என் பதாகும். மேலும் காலத்தால் பழமை யானதுமாகும்.

'மரியா இறைவனின் தாய்' என்பதை இன்றும் ஒவ்வோர் ஆண்டும் விழாவாகக் கொண்டாடக் காரணம் இன்றும்கூட நெஸ்டோரியஸ் போல தப்பறைக் கொள்கைகளை, பிற மதத்தினரும், நம் பிரிவினைச் சபையைச் சேர்ந்தவர்களும் கூறத்தான் செய்கின்றார்கள். இவர்கள் கத்தோலிக் கர்களாகிய நாம் அன்னை மரியின் மீது வைத்திருக்கும் பக்தியைக் கண்டு எள்ளி நகையாடி வருகின்றார்கள். விக்கிரக ஆராதனை என்கிறார்கள்.

இத்தகை யோர் விக்கிரக ஆராதனைக்கும், சுரூப வணக்கத்திற்கும் வேறுபாடு தெரியாதவர்கள். மேலும் மாதா மனிதவுரு எடுத்து வந்த இயேசுவுக்குத்தான் தாய், கடவுளுக்கல்ல என்றும், அவர்கள் புனிதர் கூட்டத்திலுள்ளவர்களில் ஒருவர்தான் என்றும், அவர்களுக்கு இதற்கு மேலான வணக்கங்களும், தேர்த்திரு விழாக்களும் அவசியமில்லை என்றும் நம் மாதா பக்தியை தவறாக விமர்சித்து வருகின்றார்கள். இவ்வாறாக நம்பிக்கையோடு அன்னையைத் தேடி வருபவர்களின் மனதைத் திசைதிருப்பும் முயற்சிகளை முறியடிக்கவும். தப்பறைக் கொள்கைகளைச் சரியான விவிலிய மேற்கோள்களைக் காட்டி சரி செய்யவும்தான் மீண்டும் மீண்டும் 'அன்னை மரி இறைவனின் தாய்' என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

அன்னை மரி இறைவனின் தாய் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடக்க நூ லிலேயே (தொ.நூ 3:15) 'உனக்கும், பெண்ணுக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்' என்றபோதே அவள் இறைமகனின் தாயாக நியமனம் பெற்றுவிட்டார்.

அடுத்து எசாயா நூலில் (எசாயா 7:14) 'இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்" என்று கூறுகிறார்.

'இம்மானுவேல்' என்றால் எபிரேயத்தில் 'இறைவன் நம்மோடு உள்ளார்" என்பது பொருள். இதிலும் தெள்ளத் தெளிவாக பிறந்தவர் இறைமகன் என்றால், அவரைப் பெற்றெடுத்தத் தாய் இறைமகனின் தாய்தானே?

அடுத்து நற்செய்தியில் (யோவா1:1-5) 'தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது' என்று காணப்படுகிறது. இந்த வாக்குதானே மனுவுரு எடுத்து அன்னை மரியிடம் பிறந்தது. மேலும் (புனித.லூக் 1:28-32) அன்னை மரியிடம் கபிரியேல் வானதூதர் வந்து 'அருள் மிகப் பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்' என்று வாழ்த்துகிறார். மேலும் 'அவர் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்' என்கிறார். இவை சாதாரண மனிதரால் அல்ல, கடவுளால் வானதூதர் வழியாகச் சொல்லியனுப்பப்பட்ட வார்த்தைகள் அல்லவா?

மேலும் வானதூதர் 'தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும், ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்' (புனித லூக் 1:35) இதைவிட வேறென்ன மேற்கோள் வேண்டும்? இவை இறை வல்லமையால் வெளிப்பட்ட வார்த்தைகளே, இன்னும் எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் நம் திருவிவிலியத்தில் கொட்டிக் கிடக்கின்றன.

அன்னை மரியா கடவுளைச் சுமந்து ஈன்றெடுத்தவள். சாதாரண உலகத் தாய்மார்கள் போன்று மனித உறவினால் (Biological) ஏற்பட்ட உறவன்று. தூய ஆவியாரின் வல்லமையினால் தாய்மையடைந்த (Divine Mother) புனிதத் தாய்! இறைமகனின் தாய். தந்தையில்லாமல் பிறக்க முடிந்த கடவுளால் தாயில்லாமல் பிறக்க முடியவில்லை. மகிமை பொருந்திய கடவுளைச் சுமந்து பெற்றதால் அன்னை மரியா இறைவனின் தாய் என்ற பேறு பெற்றவராகிறார்.

அன்னைமரி இறைவனுக்கு மட்டும் தாயல்ல, கல்வாரிச் சிலுவையில் தம் சீடரிடம் இயேசு 'இதோ உன் தாய்' என்று கூறியபொழுதே நமக்கும், இவ்வுலக மாந்தர் அனைவருக்குமே தாயாகிறார். நம் திரு அவைக்கும் அவர்தான் தாயென்று திருத்தந்தையும் அறிவித்துள்ளார். அனைவருக்கும் தாயாக, தன்னை நாடி வருபவர்கெல்லாம் கேட்பதைக்கொடுக்கும் தாயாக இருப்பதனால்தான் மாதா கோவில்களில் சாதி, மத, இன வேறுபாடின்றி கூட்டம் அலைமோதுவதைக் காண முடிகிறது.

'அனைத்தையும் அமைதியாக ஏற்று இறைவனிடம் கொண்டு வருவதுதான் அன்னை மரியின் இரகசியம்' என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வார்த்தையின்படி, நமது அனைத்து வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் அன்னையின் பாதம் வைப்போம். அவர் தன் இறை மகனிடம் பரிந்து பேசி இந்த ஆண்டு முழுவதும் நம்மைக் காத்து வழிநடத்துவார் என்பது நிச்சயம்!

## அழகிய உம் திருவதனம் !



அழகிய உம் திருவதனம் தினம் காண்கின்றேன் அம்மா
உம் மலர்ந்த முகம் காண்கையில்
மன அமைதி கொண்டேனே அம்மா!
ஆண்டவரின் தாய் நீராணீரே அம்மா!
உமை 'அம்மா' என்றழைக்கும்
பெறும் பேற்றினை தந்தீரே அம்மா!
என் அன்னையில் உனை காண்கிறேனே அம்மா
உமை வாழ்த்திட என் நா போதாதே அம்மா

வேதனை வருகையில் உம் திருமுகம் போதுமே
சோதனை வேளையில் திருச் செபமாலை போதுமே
பிணியால் நான் வாடுகையில் உம் திருக்கரம் தாருமே
அணி அணியாய் திரண்டிடும் உம் பிள்ளைகளை பாருமே

என்ன உள்ளது தாயே
உம்மிடம் இத்தனை அதிசயம்
எல்லையில்லாமல் உம் நாமம் போற்றுதல்
மா பெரும் பாக்கியம்

தினம் மலரும் புதிய நாள்
உம்மை வாழ்த்துகிறதே தாயே!
புலரப் போகும்புதிய பொழுது
புலம்பல்கள் இன்றி இருந்திட வேண்டும்
புதுமைகள் பலவும் நிகழ்ந்திட வேண்டும்

அன்பு மட்டுமே நிறைந்திருக்க வேண்டும்
அழிவுகள் இல்லாது எமை காத்திட வேண்டும்
அழுகை சத்தங்கள் அமர்ந்திடவேண்டும்
அமைதி எங்கும் பரவிட வேண்டும்.

பிறந்துள்ள இப்புதிய வருடம்
இறை ஆசீரால் நிறைந்து ஆபத்துக்கள் களைந்து
அழிவுகள் நீங்கிட மன்றாடும்
தாயே எமக்காய் தினமே!

P. M.மேரி பெனடிக்கா. பென்ரித், அவிசாவளை.

# 2019ஆம் ஆண்டு நிறைவில் நன்றி கூறுவோம்

ஆண்டவர் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைமாறு செய்வேன்? மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணமெடுத்து ஆண்டவருடைய திருப்பெயரை சொல்லி கூப்பிடுவேன். ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்திடுவேன் என நன்றி புகழ்பா இசைக்கும் திருப்பாடல் ஆசீரியரோடு இணைந்து ஆண்டின் இறுதிநாளில் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

- ❖ இவ்வருட தொடக்கத்தில் இருந்து எண்ணற்ற வகையில் நோய் நொடி ஆபத்துகளிலிருந்து காப்பாற்றி வந்தமைக்கும், பற்பல நலன்களால் எங்களை நிரப்பிட நம் வாழ்வை மேம்படச் செய்தமைக்கு....
- ❖ இயற்கை அழிவுகளிலிருந்தும் கொடூர தாக்குதல்களில் இருந்தும் காப்பாற்றி பாதுகாப்பை தந்ததற்காக....
- ❖ பாதுகாப்புடன் கூடிய சுகமான வாழ்க்கை தந்தமைக்காக உமக்கு நன்றி....
- ❖ எமது குடும்பத்தையும், எமது திருச்சபையையும், பங்கையும், ஆசீர்வதித்து பாதுகாத்து வழிநடத்தியமைக்கு....
- ❖ என் இறைவா இவ்வருடம் என்னை உமது நற்செய்திப் பாதையில் வழிநடத்தியதற்காக பலப்படுத்தியதற்காக, பயன்படுத்தியதற்காக, உமது உடலையும் இரத்தத்தையும் எனக்கு உணவாக தந்ததற்காக...

"எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். உமக்கு இறைவா, எங்கிருந்து தொடங்குவது என்றே தெரியவில்லை. என் எண்ணிக்கைக்கு எட்டாதவை உம் நன்மைக் கொடைகள்.

சொற்களை தேடி நான் நன்றி பகரும்போது சொல்லுக்கு அடங்காதது உம் நன்மைத்தனங்கள், என் இறைவா! என் அன்பே! என் எல்லாமுமே அத்தனைக்கும் இதய ஆழத்திலிருந்து நன்றி"



# ஆண்டு நிறைவும், மலர்வும்



# பிறந்தது புத்தாண்டு

புதியதாய் பிறக்கின்ற ஆண்டே
உன்னை ஆசித்து வரவேற்க
அரியதாய் ஏதேனும் செய்தேனா
கடந்து வந்த காலங்களில்
எண்ணிப் பார்க்கையில்
என் காயங்கள் கரைக்கின்றன.
தோல்விகள் துரத்துகின்றன.
இயலாமை என்னை ஏளனம் செய்கிறது
அடங்காத ஆசைகள் ஆட்டிப் படைக்கின்றன
சேராத உறவுகள் சோகத்தை விதைக்கின்றன.
தவற விட்ட அவகாசங்கள்
சேர்ந்து சிரிக்கின்றன.
அடைய தவறிய இலக்கு அச்சுறுத்துகின்றது
அமைதியாய் ஆலோசிக்கின்றேன்
புதிதாய் புலர்ந்து விட்ட புத்தாண்டே
உன்னை வரவேற்க நான் தயாரா?

*********************************

# பிறந்தது புத்தாண்டு 2020

இப்புதிய ஆண்டிலே அன்பே நம் வாழ்வுக்கு ஆணிவேரும், அடிப்படையுமாய் அமைவதாக. இறை ஆசீரும் ஒவ்வொருவர் வாழ்வும் வளம் பெற நம் கண்கள் கடவுளை நோக்கட்டும். பிறந்திருக்கும் புத்தாண்டில் அமைதியையும் அருளையும் பெற இறைவனிடம் மன்றாடுவோம்.

எமது கடந்த வருட வாழ்வின் கசப்பான அனுபவங்கள், துயரமான சம்பவங்கள், மறக்க முடியாத வேதனைகள், கண்ணீரில் கரைந்த நேரங்கள், அனைத்தும் முடிவு பெறட்டும். இவ்வாண்டிலே பிறந்திருக்கும் புதிய ஆண்டில், புதிய பாதையில், பயணம் தொடரட்டும்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உடமைகளையும், உறவுகளையும் இழந்து பரிதவித்து இருக்கும் மக்கள் வாழ்வில், அத்தோடு இவ்வாண்டு யாருமே எதிர்பாராத, நினைத்துப் பார்க்காத சித்திரை மாத ஆண்டவரின் உயிர்ப்பு தின குண்டு தாக்குதல் தாங்க முடியாத துயரத்தினையும், இழந்த உறவுகளையும், ஊனமுற்றவர்களையும், இத்துயரத்தின் மூலம் இருளில் மூழ்கி கிடக்கின்ற எமது சகோதர சகோதரர்களின் வாழ்வில் நம்பிக்கை தீபமாய் எரியட்டும் இப்புத்தாண்டில்.

புதிய அரசாங்கத்தின் ஆட்சி முறையில், வன்முறை, போராட்டம், அடக்குமுறை, அடாவடித்தனம், கலவரம் ஒழிந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயங்கள், தடையின்றி கிடைத்து அவர்களின் வாழ்வு மலரட்டும் புதிய ஆண்டில்.

திருமணம், குழந்தை வரம், கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்வளம், குடும்ப நலம், அனைத்தும் நிறைவாக கிடைத்திடவும், சுமைகள், சோகங்கள், வறுமைகள், வருத்தங்கள், நோய்கள், வியாதிகள் அனைத்தும் நீக்கிட புது வாழ்வு கொடுத்திட புலர்ந்தது இப்புத்தாண்டு. ஆகவே இயேசுவோடும், அன்னை மரியாவோடும், இப்புத்தாண்டைத் தொடங்குவோம். ஆண்டு முழுவதும் நிறை ஆசீரும், குறையாத அருளும் முழு அமைதியும் கிடைப்பதாக.

# கர்த்தர் பிறப்பு



தோன்றித் புகழும் விதமாகத்
தோன்றச் சொன்னான் வள்ளுவனும்
ஊன்றிப் பார்த்தால் இதுபோல
உலகில் பிறந்தார் யாருண்டு

பிறக்கும் போதே சிறப்போடு
பெரிதாம் மாண்பும்
திகழ்வண்ணம்
சிறக்கும் படியாய் தோன்றியவர்
தேவ மகனாம் இயேசு பிரான்



இயேசு கிறிஸ்து பிறப்பினாலே
எவர்க்கும் உணர்த்த வானத்தில்
வீசும் விண்மீன் தோன்றியதே
விடிவும் புவிக்கே வந்ததென்ன

மண்ணில் அமைதி மறுஉலகில்
மகிமை என்றும் நிலைப்பதற்கே
கண்ணில் தெரியும் மானிடனாய்
கர்த்தர் பிறந்தார் ஆரீராரோ....






புத்தாண்டே நீ வருக
புதிய விடியலைத் தருக
பொலிவுடன் வருக
பொங்கும் மகிழ்வைத்
தருக!

இடர்கள் போக்க வருக
இன்பங்கள்
எமக்குத் தருக

இருளை நீக்க வருக
இறையருள்
நிறைவாய் தருக!

ஒளிரும் தீபமாய் வருக
ஒற்றுமை வாழ்வில் தருக

கயமை நீக்க வருக
கடமை உணர்வைத்
தருக!

மடமை மறக்க வருக
மனித உணர்வைத்
தருக

சுயநலம் துறக்க வருக
பிறர்நலம் மனதில் தருக

மாசுக்கள்
களைய வருக
மாண்புகள் பலவும் தருக

பட்டொளி வீசி வருக
பண்புகள்
உணர்வில் தருக

குவலயம் தழைக்க
வருக
குடும்பம்
செழிப்பைத் தருக

வளங்கள்
பொழிய வருக
வளமும் நலமும்
தருக




புதுமை பூ பூக்கிறது
புதுயுகம் பிறக்கிறது
விண்ணகம் சிலிர்கிறது
மண்ணகம் மகிழ்கிறது
புத்தாண்டை
அணியும்போது
புனிதனாய் மாறிடுவோம்!
புதிரான கேள்விகளுக்கு
புதுப்புது விடையளிப்போம்
விடைபெறுவோம்
2019ஆம் ஆண்டிலிருந்து
விழுமியங்களில்
வாழ்வோம்
2020ம் ஆண்டிலிருந்து
ஆம் இயேசுவின்
விழுமியங்களில்
வாழ்வோம் இந்தப்
புத்தாண்டில்

2020

# ஆண்டவர் இயேசுவின் திருக்காட்சி விழா

## தை 06



ஆக்கம் :
அம்புறோஸ் பீற்றர்.

### குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று

குழந்தைகள் எப்போதும், தெய்வீகப் பண்புகளைக் பெற்றிருக்கின்றன. அதாவது தூய்மை, சிரிப்பு, அன்பு, கள்ளக்கபடமற்ற குழந்தைகள் என்றால், எல்லோருக்கும் ஆசைதான். எல்லோருக்கும் விருப்பமுடையவர்கள் குழந்தைகள். காரணம், குழந்தையின் புன்முறுவலான முகத்தை, கள்ளங்கபடற்ற முகத்தைப் பார்க்கும்போதே ஒரு வித இன்ப உணர்வு. தெய்வீக உணர்வு நம் உள்ளங்களில் எழுகின்றது. கள்வனையும் கரைய வைப்பது குழந்தையின் புன்சிரிப்பு.

ஆம் மனித குழந்தைகளுக்கே இவ்வித பெருமை என்றால் தெய்வீக குழந்தையாகிய இயேசுவின் பெருமை இன்னும் எத்தனை சிறந்ததாய் இருக்கும்? இதைத்தான் இன்றைய விழா நமக்கு எடுத்துரைக்கின்றது?

இன்று நம் ஆண்டவரின் திருக்காட்சி விழாவைக் கொண்டாடுகின்றோம். குழந்தையில் வடிவில் தெய்வத்தின் வெளிப்பாடு, குழந்தை வடிவில் நம்மை தேடி வந்த தெய்வம். இது தெய்வீக குழந்தை என்பதால் அதிசய விண்மீன் வானிலே தோன்ற அதைப்பார்த்து புரிந்து கொண்ட 3 கீழ்த்திசை ஞானிகள் கஸ்பார், மெல்கியோர், பல்தசார் அதிசய விண்மீனைப் பின் தொடர்ந்து சென்றனர். அது மறைந்த இடத்தில் பார்த்தால் குரூர குணம் கொண்ட ஏரோது அரசனைக் கண்டார்கள். அந்த விண்மீன் இறுதியாக நின்ற இடத்தில் பார்த்தால் குழந்தை உருவத்தில் தெய்வத்தைக் கண்டார்கள். இன்று பல்வேறு அடையாளங்கள் மூலம், இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரின் வெளிப்பாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கீழ்த்திசை ஞானிகள் பெத்லகேமின் மாட்டுத் தொழுவத்தில் ஆண்டவரின் திருக்காட்சி கண்ட நிகழ்வில் வருகின்ற கதாப்பாத்திரங்களை உற்றுநோக்கி அவர்களை நம் வாழ்வோடு தொடர்புபடுத்திப் பார்ப்போம். “ஒரு அரசன் பிறந்துள்ளான்” எனும் செய்தியைக் கேட்டு ஏரோது கலக்கம் அடைகின்றான். உலகுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்று வானதூதர்கள் இச்செய்தியை அறிவித்தனர். ஆனால் ஏரோதுக்கு இச்செய்தி நல்லசெய்தி அல்ல. தன்னுடைய அதிகாரத்திற்கும், ஆணவத்திற்கும் போட்டியாக இக்குழந்தை வரக்கூடும் என அஞ்சிய கோழை ஏரோது. தன்னுடைய அதிகாரத்தைக் தக்க வைத்துக் கொள்வதற்காக எத்தனை கொலையையும் செய்யத் தயங்காதவன் ஏரோது.

இன்றைய ஏரோதுகளும் செய்வது இதுதான். அதிகாரத்தைக் கைப்பற்றி அதைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எதையும் செய்யத்துணியும் தலைவர்கள் யாருக்கு என்ன நடந்தாலும் தன்னுடைய முதன்மை, முக்கியத்துவம், உரிமைகளில் யாரும் கைவைக்கக் கூடாது என்ற மனநிலை கொண்டவர்கள். தங்களுக்கு கசப்பாக இருக்கும் உண்மைகளை ஒட்டுமொத்தமாக மறுத்து பொய்யை உண்மையாக்குபவர்கள். வெளியரங்கமாக பசப்புவார்த்தைகள் பேசிக்கொண்டு, உள்ளே கத்தியைத் தயாராக வைத்திருப்பவர்கள்.

### இறைநூல் அறிஞர்கள்

உலகியலிலும் மறை அறிவிலும் தேர்ச்சி பெற்றவர்கள். நாட்டில் அறிஞர்கள் என்றால் இவர்கள் மட்டும்தான். பல விஷயங்கள் தெரிந்தவர்கள் தங்கள் அறிவால் பிறரை வழிநடத்த வேண்டியவர்கள். மெசியாவைப் பற்றி மறைநூலில் முன்னறிவிக்கப்பட்டதை எல்லாம் அறிந்தவர்கள். ஆனால் தங்கள் அறிவை உபயோகித்து தாங்களும் மெசியாவை தேடவில்லை, பிறரையும் தேட வைக்கவில்லை. தங்கள் மறை அறிவை துரோகியான ஏரோதுக்கு விற்றுவிட்டனர். அவ்வாறு செய்வதே அவர்களுடைய சுயநல வாழ்வுக்கு இலாபகரமாக இருந்தது. மறைஅறிவால் அவர்கள் உரிமை வாழ்வை தமதாக்கிக் கொள்ளவில்லை. மாறாக மறை அறிவைப் பணயம் வைத்தே ஏரோதாகிய தீயசக்திக்கு அடிமையாகி அதில் சிற்றின்பம் கண்டனர்.

நமது சமுதாயத்திலும் உலகிலும் அறிவும் திறமையும் உள்ள பலர், அதை ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்கு உபயோகிக்காமல் அழிவு கலாச்சாரத்திற்குத் தங்களையே விற்று வருகின்றனர். தீயவர்களும், கொலைக்காரர்கள், கொள்ளைக்காரர்களும், நீதி, உண்மை என்றால் என்ன என்று தெரியாதவர்களும் சமுதாயத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றவும் அதைத்தக்க வைத்துக்கொள்ளவும் முடிகிறது என்றால், பல அறிஞர்கள், பல திறமை வாய்ந்தவர்கள் தீய சக்திகளுக்கு தங்களையே விற்றுவிடுவதால் தான். இன்றும் பல மதத் தலைவர்களும் ஆன்மீகவாதிகள் என்று கருதப்படுவர்களும் கூட தீய சக்திகளுடன் அணிசேர்ந்து கொள்கின்றனர். அருள்வாக்கு உரைப்பவர்கள், இன்றைய ஏரோதுகள் எதைக் கேட்க விரும்புகிறார்களோ அதைச் சொல்லி வெகுமானங்கள் பெற்றுக் கொள்கின்றனர். நம்மில் எத்தனையோ பேர் நமது அறிவையும் திறமைகளையும் சமுதாயத்தின், திருச்சபையின், பங்கின், அன்பியத்தின் வளர்ச்சிக்கு உபயோகிக்காமல் ஒதுங்கிக் கொள்கின்றோம் அல்லது தளர்ச்சிக்கும் காரணமாக இருந்திருக்கின்றோம்.

### ஜெருசலேம், பெத்லகேமின் பொதுமக்கள்

உலக வரலாற்றையே மாற்றியமைத்த பெருநிகழ்ச்சி அவர்கள் மத்தியில் நடந்து கொண்டிருந்தது. மோயீசனும் இறைவாக்கினரும் பல்வேறு விதங்களில் முன்னறிவித்த ஒரு நிகழ்ச்சி, அந்தநிகழ்ச்சியில் தங்களையே ஈடுபடுத்திக் கொள்ள வெகுதூரத்திலிருந்து ஞானிகள் தேடிவந்துள்ளனர். ஆனால் அப்படிப்பட்ட பெருநிகழ்ச்சி ஒன்று தங்கள் மத்தியில் நடைபெறுகிறது என்று ஜெருசலேம் பொதுமக்களும் பெத்லகேம் பொதுமக்களும் அறியவும் இல்லை. அதைப்பற்றி அக்கறை கொள்ளவும் இல்லை. என்ன நடக்கிறது என்றே தெரியாமல் இருந்தனர்.

நமது அன்றாட வாழ்விலும், சாதாரண - சாமனிய என்று நாம் கருதுகின்ற நிகழ்ச்சிகளிலும் நபர்களிலும் இறைப்பிரசன்னமும் இறைவெளிப்பாடும் உள்ளது. இதை நாம் தேடுகின்றோமா, இனம் கண்டு கொள்கின்றோமா? அல்லது அலட்சியம் செய்கின்றோமா? சமுதாயத்தின் உண்மையான வளர்ச்சிக்காவும் மக்களின் மனித மாண்புக்காகவும் உரிமைகளுக்காகவும் நமது மத்தியிலும் பல மக்கள் இயக்கங்களும் தனிமனிதர்களும் செயல்படுகின்றனர். இவர்களையும் இவர்களுடைய செயல்பாடுகளையும் நாம் அலட்சியம் செய்து சுயநலத்தோடு வாழ்வைத் தொடர்கின்றோம் என்றால் நமக்கு அன்றைய ஜெருசலேம் - பெத்லகேம் பொதுமக்களுக்கும் வேறுபாடு இல்லை.

### கீழ்த்திசை ஞானிகள்

உண்மை இறைவனைத் தேடி நீண்ட பிரயாணம் மேற்கொள்கின்றனர். எவ்வளவு தூரம் செல்லவேண்டும், எத்தனை நாட்கள் ஆகும், பாதை எப்படி இருக்கும், எந்த உறுதியும் இல்லாத ஒரு பிரயாணம். அவர்களுக்குக் கிடைத்த ஒரே தடயம் - விண்மீன் அதுவும் ஜெருசலேமில் மறைந்துவிடுகிறது. தங்கள் பிரயாணத்தில் தங்கள் தேடலில் இவர்கள் நம்பிக்கை இழப்பதில்லை. ஆர்வம் சிறிது குறைவதில்லை. இறுதியாக அவர்கள் சென்றடைந்தது பெத்லகேமின் மாட்டுத்தொழுவம். விண்மீன் அந்த இடத்திற்கு மேல் வந்து நின்றுவிட்டது. எனவே தாங்கள் வந்து சேர வேண்டிய இடம் அதுதான் என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள். “சே, இதைப்பார்க்கவா இவ்வளவு தூரத்திலிருந்து, இவ்வளவு கஷ்டப்பட்டு பிரயாணம் செய்து வந்தோம்!” என அவர்கள் சலித்துக் கொள்ளவோ அக்கலாய்த்துக் கொள்ளவோ இல்லை. ஆதரவற்றுக் கிடந்த அந்தக் குழந்தையில் இறைவனின் திருக்காட்சியை அவர்கள் காண்கின்றனர். எனவேதான் மகிழ்ச்சியடைந்தனர். தெண்டனிட்டு வணங்கினர். காணிக்கைகளையும் செலுத்தினர்.

### இன்றைய ஞானிகள் :

இவர்களுக்கு அருளப்பட்டிருக்கின்ற விண்மீன் - இறைவார்த்தை. இறைவார்த்தையின் ஒளியில் வழிநடப்பவர்கள். தூரம், துன்பம், பிரச்சினைகள் எவ்வளவுதான் இருந்தாலும் இலட்சியத்தைக் கைவிடாதவர்கள். இலஞ்சமும் ஊழலும் உள்ள சமுதாயத்தில் நேர்மையோடு உழைப்பவர்கள் விடாமுயற்சியுடனும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் நற்செய்தி மதிப்பீடுகளின் படி வாழ்பவர்கள். வாழ்க்கைப் போராட்டத்தில் எத்தனை ஏரோதுகளைச் சந்திக்க நேர்ந்தாலும், விவேகத்துடன் சமாளித்துக் கொண்டு முன் செல்பவர்கள். தங்களுடைய இலக்கையும், இலட்சியத்தையும் உலகம் முழுவதுமே அலட்சியம் செய்தாலும், ஏளனம் செய்தாலும், இழித்துரைத்தாலும் அதிலிருந்து மாறாதவர்கள். ஆண்டவருடைய திருக்காட்சியை இவர்கள் காண்பது வாழ்வின் இறுதியில் மட்டுமல்ல - செல்லும் பாதையெல்லாம் வாழ்வு முழுவதும் திருக்காட்சியே.

ஏரோது, மறைநூல் அறிஞர், பொதுமக்கள், ஞானிகள் ஆகிய நான்கு கதாப்பாத்திரங்களும் நம்மில், என்னில் இருக்க வாய்ப்பு உண்டு. நம்மில் அழிக்க வேண்டியவற்றை அழித்து, மாற்ற வேண்டியவற்றை மாற்றி, பெருக்க வேண்டியவற்றை பெருக்கி, ஞானிகளாக மாறி வாழ்வையே ஆண்டவரின் திருக்காட்சியாக மாற்றுவோம்.

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI

புதுவருட நல்வாழ்த்துக்கள்





## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**ஆண்டவரின் திருக்காட்சி விழா (05.01.2020)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** திருஅவையின் அன்பார்ந்த இறைமக்களே! இன்று நாம் ஆண்டவர் இயேசுவின் திருக்காட்சி விழாவை கொண்டாடுகின்றோம். இதை தேடலின் திருவிழா என்றும் அழைப்பார்கள். இன்றுதான் இயேசுவின் பிறப்பானது புறஇனத்தாருக்கும் அறிவிக்கப்பட்டது. தேடல் இல்லாத மனித இனம் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. தேடல் ஒன்றே வாழ்வதற்கு நம்பிக்கை அளிக்கின்றது. மீட்பு கிடைக்கும் என்ற விசுவாசம் பிறக்கின்றது. "நீங்கள் என்னைத் தேடுவீர்கள் உங்கள் முழு இதயத்தோடு என்னைத் தேடும்போது நீங்கள் என்னைக் கண்டு-கொள்வீர்கள்" என்ற இறைவார்த்தைக்கேற்ப இயேசுவை முழு உள்ளத்தோடு தேடி வந்த ஞானிகள் இயேசுவை கண்டு கொண்டனர். இவர்களிடம் இருந்த நம்பிக்கையும் விசுவாசமும் தான் இயேசுவைக் கண்டு கொள்ள வழி செய்தது. அவர்கள் பல சவால்களை சந்தித்து இயேசுவைக் கண்டபோது அவர்களது கஷ்டமெல்லாம் நீங்கியது. நாமும் முழு இதயத்தோடு ஆண்டவரை தேடிச் சென்று அவரின் ஆசி பெற்று வாழ வரம் கேட்டு பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசா 60 : 1–6**
ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, எல்லா இனத்தார்களும் உமக்கு ஊழியம் செய்வார்கள்.

**இரண்டாம் வாசகம் : எபே 3:2–3, 5–6**
பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளர் என இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவரின் விண்மீன் எழக் கண்டோம் அவரை வணங்க வந்துள்ளோம் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 2:1–12**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆண்டவர் இயேசுவை அனைத்துலக மக்களுக்கும் வெளிப்படுத்தி அவரது கொள்கைகளைப் பறைசாற்றி செயல்படும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை ஆயர்கள் அருட்பணியாளர்கள் துறவிகள் அனைவரும் இயேசுவிற்கு சான்று பகரும் தமது வாழ்வின் ஊடாக மக்களை வழிநடத்தத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாட்டின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் யாவும் ஏரோதனுடைய மனநிலையை போன்றது அல்லாது தூய மனதுடன் செயல்படுத்தப்பட்டு அதனால் அனைத்து மக்களும் இனமத மொழிப்பாகுபாடுகள் இல்லாமல் வாழும் சூழ்நிலையை உருவாக்க வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

இயேசுவைக் கண்ட ஞானிகள் தமது பாதையை மாற்றிக் கொண்டது போல நாமும் இயேசுவைத் தேடி வந்து அவர் தரும் மீட்பைக் கண்டடைந்து நமது வாழ்க்கையை மாற்றி அமைத்து எமது சாட்சிய வாழ்வால் சான்று பகிரவும், திவ்விய நற்கருணையை தூய்மையான உள்ளத்துடன் பெற்று அவரின் பிரசன்னத்தில் நிறைந்து வாழவும் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

**ஆண்டவரின் திருமுழுக்கு (12.01.2020)**

**வாசக விளக்கம்:** எமது அன்னையாம் திருஅவையானது ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவை கொண்டாடுகின்றது. பாவமற்ற இயேசு திருமுழுக்குப் பெற்றது தன்னுடைய பணிவாழ்வுக்குப் பலரும் எழுச்சியும் புத்துணர்ச்சியும் பெறவே, நாமும் திருமுழுக்கின் வழியாக நம்முடைய பாவ இயல்புகளை களைந்துவிட்டு புதியதொரு வாழ்வை வாழத் தொடங்குகின்றோம். மனிதனானவன் ஒவ்வொரு நாளும் புதிய நாளை எதிர்பார்க்கின்றான். புதிய வாழ்வு முறைக் கலாச்சாரம், புதியமொழிநடை, புதிய நண்பர்கள் என உலகம் வெளித்தோற்றத்தில் புதிய புதிய என்று சென்று கொண்டே இருக்கிறது. இது மகிழ்ச்சியை தருகிறது. ஆனால் இது முழுமையான மகிழ்ச்சியல்ல. ஆனால் திருமுழுக்கு வழியாக புதிய வாழ்வு வாழும் போது எமது வாழ்வு தூய்மையாகிறது. இந்த தூய வாழ்வினால் ஆண்டவர் மகிழ்ச்சியடைகிறார். ஆண்டவரின் திருமுழுக்கு நாம் பெற்ற புதிய தூய வாழ்வை வாழ உதவட்டும்.

**முதல் வாசகம் : எசா 42:1–4,6–7**
இதோ என் ஊழியன் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகிறது.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் தம் மக்களுக்கு அமைதி அளித்து ஆசி வழங்குவாராக!.

**இரண்டாம் வாசகம் : தி.ப 10:34–38**
கடவுள் இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! வானம் திறந்தது, தந்தையின் குரலொலி கேட்டது. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்கு செவிசாயுங்கள்" அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 3:13–17**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைஇயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவை திருஅவையோடு இணைந்து கொண்டாடும் நாம் இன்றைய இறைவார்த்தை வழிநின்று நாம் பெற்றுக் கொண்ட திருமுழுக்கின் வழியாகப் புதுவாழ்வு தொடங்கவும், புண்ணிய வாழ்வு வாழவும் அதன் வழியாக ஆண்டவரை மகிமைப்படுத்தவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

திருமுழுக்கினால் ஜென்மபாவத்திலிருந்து விடுதலை பெற்ற நாம் தீமைகளின் தலைவனாம் அலகையை வெற்றி கொள்ளவும், உலகத்தின் மதிப்பீடுகளைக் களைந்து கிறிஸ்துவின் மதிப்பீடுகளை கைக்கொள்ளவும், திருமுழுக்கு நமக்கு தூய வாழ்வை தருகிறது என்பதை உணர்ந்து வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

திருமுழுக்கு ஒரு மனிதனை கடவுள் வாழும் தூய ஆலயமாக மாற்றுகின்றது. உண்மையிலும், ஆவியிலும் இடைவிடாமல் இறைவனுக்கு வழிபாடு நடத்தும் வல்லமையை தருகிறது. இயேசுவே என் ஆண்டவர் கடவுள் என்று விசுவசிக்கவும் அதை அறிக்கையிடவும் துணை செய்கின்றது. இவற்றை உணர்ந்து வாழ்வதன் வழியாக நாமும் இறைவனின் அன்பார்ந்த மக்களாகும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று...

## புதுவாழ்வின் அடையாளமே

# திருமுழுக்கு

**ஆக்கம் :**
**அருட்தந்தை. யா.றமேஸ் அ.ம.தி**



கிறிஸ்து ஆண்டவரை தலைவராக ஏற்று, அவருடைய போதனைகளை வாழ்வாக்கி அவரால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கமைவாக வாழ்வோரின் கூட்டமே திருச்சபை ஆகும். பாவ இருளில் இருந்து மக்களை விடுவித்து அவர்களை ஒளியின் பாதையில் நடத்திச்சென்று, புதுவாழ்வை அவர்களில் தொடங்கிவைக்க, கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் எனும் முத்திரையை அவர்களுக்கு கொடுக்க திருச்சபை வழங்கும் ஓர் அடையாளமே திருமுழுக்கு ஆகும். உலகின் பாவங்களை போக்கும் கடவுளின் செம்மறியாக இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இயேசு தன்னுடைய பாடுகள் மரணம் என்பவற்றின் மூலம் மனுக்குலத்தின் பாவங்களைப் போக்கி தன்னுடைய உயிர்ப்பின் மூலம் மக்களுக்கு புதுவாழ்வு தந்தார். எனவே ஒருவன் கிறிஸ்துவோடு பாவத்துக்கு இறந்து, தன்னுடைய பழைய மனித இயல்பை அடக்கம் செய்துவிட்டு, கிறிஸ்துவோடு புதுவாழ்வுக்கு உயிர்த்தெழுவதே (உரோ 6:3-5) உண்மையான திருமுழுக்காகும்.

கடவுள் தன்மையில் விளங்கிய கிறிஸ்து தன்னை மிகவுமே தாழ்த்தி மனிதனாக பிறந்தது மட்டுமல்ல பாவம் தவிர்ந்த மற்றும் அனைத்திலும் மனிதரோடு ஒன்றித்த வாழ்வின் மூலமாகவே மனுக்குலத்தை மீட்டார் என்பதை அவருடைய திருமுழுக்கு காட்டிநிற்கிறது. அனைவருக்கும் வாழ்வின் சக்தியை வழங்கும் வழிகாட்டி மக்களின் வாழ்வுநிலை ஒவ்வொன்றையும் உய்த்துணர வேண்டும். அவர்களின் இன்ப துன்ப போராட்டங்களில் எதிர்கொள்ளும் தளர்வுகளை, தடைகளை அனுபவிக்க வேண்டும். பசி, தாகம், தனிமை, எதிர்ப்பு, புரிந்துகொள்ளப்படாமை, ஒதுக்கப்படுதல், இடப்பெயர்வு, அகதிவாழ்க்கை போன்ற எதிர்மறை அனுபவங்களின் பாதிப்பையும் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு மானுட வடிவம் பெற்ற ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கும் மண்ணக வாழ்வின் பரிணாமத்தை தானும் அனுபவிக்கப் போவதன் அடையாளமாகத்தான் மக்கள் பெற்ற அதே திருமுழுக்கை இறைமகன் இயேசுவும் பெற்றார். இதன் மூலம் மண்ணில் மக்களை வழிநடத்தும் தலைவர்களுக்கும், மறைவழிகாட்டிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார். வரலாற்று நாயகன் இயேசுவின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது அவருடைய திருமுழுக்காகும். அதேபோல் திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவுக்குரியவர்களாக முத்திரையிடப்பட்ட எங்களது வாழ்வு எத்தகையது என்பதை சிந்திக்க இக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம். திருமுழுக்கின் விளைவாக நாம் கடவுளின் மக்களளென அழைக்கப்படுகிறோம். கடவுளின் மக்களாகவே இருக்கிறோம் (யோவா 3:1). அவ்வாறிருக்க ஊனியலபின் செயல்களுக்கு நாம் இடம்கொடுக்கலாமா? எமது வாழ்வில் பரத்தமை, கெட்டநடத்தை, காமவெறி, பகைமை, பொறாமை, கோபம், பிரிவினை, பொய், வன்முறை எண்ணங்கள், அநீதிக்கு துணைபோதல், பிறரின் பெயரைக் கெடுத்தல் போன்ற தீயசெயல்களை நாம் அனுமதிக்கலாமா? ஆனால் இன்று நாம் எதைப்பற்றிக்கொள்கின்றோம்..... எமது வாழ்வே விடை பகரும்.

இன்றைய உலகில் நாம் எதைக் காண்கின்றோம் அன்பற்ற சமுதாயம், பழிவாங்கும் மக்கள், பொய்மையின் ஆட்சி, அநீதியின் வெளிப்பாடுகள், வன்முறையின் வெகுமதிகள் என்பனவே. இந்நிலையில் இவ்வுலகில் கடவுளின் அரசரிமைக்குரிய ஆவியின் செயல்களான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் போன்ற நற்பண்புகளை திருமுழுக்குபெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்வில் முன்னெடுக்கின்றபோதே திருமுழுக்கில் தான்பெற்ற அழைப்புக்கு அர்த்தம் காணமுடியும். தன்னை யாரெனத் தெளிவாக உணர்பவனும், தன்னடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்பவனும்தான் பிறரது அடையாளத்தை, பிறரது வாழ்வின் பொருளை அவர்களுக்கு உணர்த்த முடியும். திருமுழுக்கின் மூலமாக நாமெல்லோரும் பெற்றுக்கொண்ட அடையாளத்தின் தன்மையை விளங்கிக்கொண்டு, எமது வாழ்வில் அதன் அர்த்தத்தை புரிந்துகொண்டு எமது திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்துக்கொள்ளுவோம். வாழ்வின் பொருள் மறந்து, உலகின் மாயைகளுக்குள் தம்மை அழித்துக்கொள்ளும் மக்களுக்கு எம்வாழ்வின் மூலமாக நல்வழியை காட்டுவோம். பின்நவீனத்துவம் என்ற போர்வையினுள் சிக்கி எமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் சின்னாபின்னமாக்கி குறிக்கோளற்ற வாழ்வில் தம்வாழ்வை அழிக்கும் உள்ளங்களை எமது அன்பாலும், இறைவேண்டலாலும் திசைமாற்றுவோம். தன்னையே அழித்து உலகிற்கு புத்துயிரளித்த இயேசுவைப் பின்பற்றி எமது வாழ்வின் மூலம் உலகில் மறுகிறிஸ்துவாக திகழ்வோம்.



## ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை

# “அழைத்திரே என்னை நீர் நாதா”

## (குருத்துவ வாழ்வில் வைர விழா)

ஆக்கம் : பெ. டிலோய்ட்சன் பெர்னாண்டே
தேசிய குருமடம் கண்டி.

ஒரு கிறிஸ்தவ பாடல் இறைவனின் அழைப்பை பற்றி பின்வருமாறு பாடுகின்றது.

**அழைத்தீரே என்னை நீர் நாதா**
**உம் பின்னால் வந்தேனா நாதா**
**தாயின் கருவிலே என்னைத் தேர்ந்தவரே**
**என் இயேசுவே உமக்கு நன்றி**

**பலகோடி மனிதர்களிலிருந்து - எனை**
**தேர்ந்து கொண்டீரே நன்றி**
**இரத்தத்தால் கருவி பரிசுத்தமாக்கி**
**அபிஷேகம் செய்தீரே நன்றி...**

இந்தப் பாடல் வரிகளிலிருந்து ஒருவருடைய இறையழைப்பை பற்றி எளிதாக அறிய முடிகிறது. என்றாலும் தன்னுடைய குருத்துவ வாழ்வில் வைர விழா காணும் (60 ஆண்டுகள்) ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையை பற்றி எழுதுவதற்கு எனக்கு வயதோ, அனுபவமோ கிடையாது என்றாலும், அவரைப்பற்றி நான் அறிந்துள்ளேன். அவருடைய திருப்பணிகளில் பீடப்பணியாளனாக கடமையாற்றியுள்ளேன். அவருடைய கைகளினால் உறுதிபூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டேன் என்ற உயரிய பெருமையுடன் எங்களுடைய வைர விழா நாயகனைப் பற்றி ஒரு சில வாழ்க்கைத் துளிகளை எழுதுகின்றேன்.

ஒரு மனிதனை இறைவன் தெரிந்து கொண்டார் என்றால் அது அவனுடைய நன்மைத்தனத்தின் நிகழ்வினால் அல்ல மாறாக இறைவனுடைய மாறாத அன்பினாலும், இரக்கத்தினாலுமே. கொழும்பு உயர்மறைமாவட்டம் ஈந்த ஒரு உயரிய செல்வம் தான் எங்களுடைய ஓய்வுபெற்ற பேராயர். காரணம் கிட்டத்தட்ட 25 ஆண்டுகாலமாக ஒரு மறைமாவட்டத்தை வழிநடத்தி சிறந்த ஒரு ஆயனாக, நல்ல தந்தையாக, பாசமிகு குருவாக, அரவணைப்பில் அன்னையாக இவ்வாறு பல முகங்களைக் கொண்டு பணியாற்றிய பேராயர் இலங்கை திருச்சபையின் உரோமன் கத்தோலிக்க சமயம் இன்றளவும் புகழ்பெற்று விளங்க அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். அத்தகைய மாபெரும் மனிதனின் வாழ்க்கைக்கு இறைவன் கொடுத்த பரிசு தான் 60 ஆண்டுகால திராட்சை தோட்ட வாழ்வு. “நீங்கள் என்னுடன் இருந்தால் பலன் கொடுப்பீர்கள்” என்ற வாக்கினை ஏற்றுக்கொண்டு, இன்றளவும் இயேசுவின் பாதத்தில் இணைந்து வாழும் ஓய்வுபெற்ற பேராயர் பல மக்களின் உள்ளங்களை கவர்ந்த மாபெரும் தந்தையாக திகழ்கின்றார். அத்தகைய ஆயனை நன்றியுடன் எமது சமூகம் நினைவிற் கொள்வதுடன் அவருக்காக தொடர்ந்து செபிக்கவும் கடமைப்பட்டுள்ளது.

### பிறப்பும் குடும்ப வாழ்வும்

பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை 1932ம் ஆண்டு மார்கழி மாதம் 6ம் திகதி தாழ்மையும், பக்தியுமுள்ள பெற்றோர்களாக குருகுலசூரிய வில்பிரட் செபரினாஸ் மற்றும் குருகுலசூரிய மேரி லில்லி பெர்னாண்டோ அவர்களுக்கு, நீர்கொழும்பு மீன்பிடி கிராமத்திலே இரண்டாவது மகனாக பிறந்தார். இவருக்கு 4 சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உள்ளனர். இவர் தனது ஆரம்பக்கல்வியை முன்னக்கரையிலுள்ள உரோமன் கத்தோலிக்க கலப்பு பள்ளியில் பயின்று பின்னர் நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் தொடர் கல்வியினை மேற்கொண்டார். இவ்வாறு தனது பாடசாலை வாழ்விலே இணைந்து தனது கல்வியைத் தொடர்ந்த ஆயர் சிறிய மாணவனாக இருக்கும் போதே இறை குரலுக்கு செவிகொடுத்து, திராட்சை தோட்ட ஊழியனாக வேண்டுமென்று தன்னை அர்ப்பணித்தார்.



ஒரு மனிதனை
இறைவன் தெரிந்து
கொண்டார் என்றால்
அது அவனுடைய
நன்மைத்தனத்தின்
நிகழ்வினால்
அல்ல மாறாக
இறைவனுடைய
மாறாத
அன்பினாலும்,
இரக்கத்தினாலுமே.

### இறையழைப்பும், குருத்துவ வாழ்வும்

இறையழைப்பிற்கு பக்தியுடன் பதிலளித்த நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை புனித அலோசியஸ் குருமடத்தில் இணைந்து தொடர்ந்து 1949ல் லண்டன் மெட்ரிகுலேஷன் இணைந்து 1951ம் ஆண்டு கலைமானி பட்டம் பெற்று 1953ம் ஆண்டு புனித பேணாட் உயர்குருமடத்தில் இணைந்து தனது மெய்யியல் கல்வியைத் தொடர்ந்தார். இவர் தனது கல்வியினை சிறப்பாக மேற்கொண்ட காரணத்தினால் தனது கலைமானி பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 1954ம் ஆண்டு உரோமிற்கு அனுப்பப்பட்டார். அங்கு இறையியல், மெய்யியல் இரண்டிற்கும் கலைமானி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கர்தினால் அனஜியாஷின் ஆண்டகையினால் 1950ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் 1960ம் ஆண்டு இலங்கை நாட்டிற்கு திரும்பி வந்த இளங்குரு 1960ம் ஆண்டு புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். இதனை தொடர்ந்து 1973ம் ஆண்டு தனது முதுமானி பட்டத்தை பெற்றுக் கொள்ள உரோமிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு முதல்தர நிலையில் சித்தியடைந்தார்.

இவருள்ள காலத்தில் புனித அலோசியஸ் சிறிய குருமடத்தின் அதிபராகவும், பின்பு தேசிய குருமடத்தின் பணியாளராகவும் கடமையாற்றினார்.

### இலங்கையின் இளைய பேராயர்

கர்தினால் தோமஸ் ஆண்டகையின் பதவிக்காலம் முடிவடையவே அவர் தனக்குப் பின்னராக இம்மறைமாவட்டத்தை வழிநடத்த ஒரு ஆயரை தேர்ந்தெடுக்க கடமைப்பட்டிருந்தார். அதிலே ஒரு தகுதியான, அர்ப்பணிப்புள்ள ஒரு குருவை தேர்வு செய்ய வேண்டும். இடைவிடாத செபத்தினாலும், தூய ஆவியின் வழிநடத்தலினாலும் மூன்று பெயர்களை தெரிவு செய்து அனுப்பவே, பரிசுத்த திருத்தந்தையிடமிருந்து செய்தி கிடைத்தது. 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி அச்செய்தி கிடைக்கவே அதனை அறிவித்த கர்தினால் ஆண்டகை, மறைமாவட்டத்தின் புதிய பேராயராக அருட்தந்தை நிக்கலஸ் மாக்கஸ் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்தார். அருட்தந்தை தனது 44வது வயதில் பேராயராக நியமனம் பெற்றார். இவரே இளம் வயதில் பேராயரானார் என்ற பெருமையும் பெற்றார்.

### முதல் மறைமாவட்ட பேராயர்

மேதகு நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 7வது பேராயராக கர்தினால் தோமஸ் குரே ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டார். இலங்கையின் முதலாவது மறைமாவட்ட குரு பேராயாரானது முதற்தடவையாகும்.











இதற்கு முன்னர் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்களே ஆயர்களாக அபிஷேகம் செய்யப்பட்டு, கடமையை நிறைவேற்றி வந்தார்கள் என்றும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகைக்கு முன், 5 அமலமரித்தியாகிகள் சபைசை் சேர்ந்தோர் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்களாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## ஆயர்த்துவ வாழ்வு

- இவருடைய 25 ஆண்டு கால ஆயர்த்துவ வழிகாட்டலில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 34 பங்குகளை நிறுவினார். அதுபோல பரந்துபட்ட பணிகளை மேற்கொண்ட இவர் விசுவாசிகளின் ஆன்மீக ஆயனாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. திருச்சபையின் சவால்களை எதிர்கொண்டு திருச்சபையில் கல்வி, சமூக மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் பங்களிப்பு செய்து புதிய முயற்சிகளை மேற்கொண்டார்.
- இவருடைய காலத்தில் தான் கொழும்பு உயர்மறைமாவட்டத்தை 3 மறைமாவட்டங்களாக பிரித்தார். அத்தோடு குருமுதல்வர்களை நியமித்து தமது பணிகளை இலகுபடுத்தினார். இத்தகைய நிர்வாக முறையே அறிமுகம் செய்த பேராயர் பங்குகளை சந்தித்து, குருக்களினதும், மக்களினதும் குறைகளை கேட்டறிந்தார். அதனை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு, மக்களோடு மக்களாக தன் பணிகளை மேற்கொண்டார்.
- இவருடைய காலத்தில் பல குருக்களை அபிஷேகம் செய்துள்ளதுடன், பல ஆயர்களின் அபிஷேகத்தினை துணை ஆயராகவும் பலி நிறைவேற்றியுள்ளார். கிட்டத்தட்ட 172 குருக்களை அபிஷேகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- அப்போஸ்தலிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள, இறையியல் துறையில் இளமானி பட்டம் பெறுவதற்கு உள்ளூர் பட்டப்படிப்புக்களுக்காக பல்கலைக்கழகங்களுக்கும், உயர்தரம் சார்ந்த கல்வி தகுதிகளுக்காக குருக்களை ஆயத்தப்படுத்துவதும், வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்தவரும் இப்பேராயரே.
- இவர் பேராயராக இருந்த காலத்தில் ஆயர் மெல்கம் ரஞ்சித் மற்றும் ஆயர் மேரியஸ் பீரிஸ் ஆகியோரை ஆயராக திருப்பொழிவு செய்தார்.
- இவர் இளங்குருக்களை அபிஷேகம் செய்து பங்கு பணிகளுக்கு மட்டுமல்லாது, குறிப்பாக பாடசாலை சேவைகளுக்கும் அனுப்பி வைத்தார்.

இன்னும் பல கருத்துக்களையும், செயற்பாடுகளையும் கூறிக்கொண்டே செல்லலாம். காரணம் 25 ஆண்டுகளாக கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயராக கடமையாற்றியமை நாம் பெற்ற பாக்கியமே. என்நாளும் பேராயரினால் அபிஷேகம் செய்யப்பட்ட குருக்கள். இன்றும் அவருக்கு அளவுக்கதிகமான அன்பினை செலுத்துவரை காணலாம். குறிப்பாக ஒரு குருவானவரின் அகநலன்களை அறிந்து கொள்ள பங்கு பணிமனைக்கு சென்று அவருடைய நலன் விசாரித்து ஒரு தந்தையாக வழிகாட்டியமை குறிப்பிடத்தக்கது.

இன்றளவும் "நிக்கலஸ் மாக்கஸ்" என்ற பெயர் ஒலிக்கிறதென்றால் அவர் ஒரு குருவானவர், ஆயர் என்பதைவிட மக்களின் ஏகோபித்த கருத்து அவர் ஒரு சிறந்த கடவுளின் மனிதர். (The Mab of God) பேதுருவின் அடிச்சட்டை பின்பற்றிய ஒரு புனிதர். மூன்று தசாப்த காலமாக அவருடைய ஆயர்த்துவ வாழ்வை மிகவும் பணிவாகவும், மனத்தாழ்மையுடனும் நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை தாய்திருநாட்டை நேசித்த ஒரு மனிதர். இன்றளவும் மக்கள் மனங்களில் வாழும் மனிதர் நான் சிறுவனாக, பீடப்பணியாளனாக இருக்கின்றபோது, அதிகம் மக்களால் பேசப்பட்ட ஒரு ஆயர். தனது இணை ஆயர்களுடன் இணைந்து (இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் 1989 - 1995) மக்களின் ஆன்மீக வழிகாட்டலுக்காக அயராது உழைத்தது அவருடைய பணியின் சிறப்பினை காட்டுகின்றது.

## இறுதியாக

"Tospeak the truth in love" (அன்பில் உண்மையை எடுத்துரைக்க) என்ற மகுட வாசகத்தினை மணிமுடியாக கொண்டு, தனது 25 வருட கால ஆயர்த்துவ வாழ்விலும், 60 ஆண்டுகால குருத்துவ வாழ்விலும் இறைவனில் விசுவாசங் கொண்டு, தனது அன்பினால் உண்மையை வெளிப்படுத்தி, எல்லோர் உள்ளங்களிலும் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற "வாழும் புனிதர்" நம் பேராயரின் உடல் நலத்திற்காக விஷேட விதமாக செபிப்போம். எல்லாம் வலல இறைவன் அவரை முழுமையாக ஆசீர்வதிக்கவும், அவருடைய வழியாக எம் மறைமாவாட்டம் பெற்றுக்கொண்ட அனைத்து நன்மைத்தனங்களுக்கும் நன்றி கூறுவதுடன், இன்றளவும் எம்மனங்களில் வரும் எம் பேராயரை, நல்ல மனிதரை இறைவன் ஆசீர்வதிப்பாராக. அவர் குரு என்பதைவிட அவர் கடவுளின் சிறந்த மனிதர். "ad multos annos"



புதுவருட நல்வாழ்த்துக்கள்



# மறைக் கல்வி அறிவோம்

## ஆண்டவர் இயேசு கிறிஸ்து

**01. இயேசு எங்கே பிறந்தார்?**

● இயேசு பெத்லகேம் என்னும் நகரில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அவர் பிறந்த தினத்தினை நாம் நத்தார் தினம் என அழைக்கின்றோம்.

**02. ஆண்டவர் இயேசு தம் வாழ் நாளில் என்ன செய்தார்?**

● ஆண்டவர் இயேசு தம் வாழ்நாள் முழுவதும் மனிதர்கள் விண்ணகம் செல்லும் வழியை எடுத்துரைத்தார். தமது சொல்களிலும்செயல்களிலும் அதனைச் செய்தார். அதை புதுமைகளாலும் உவமையாலும் உறுதிப்படுத்தினார்.

**03. ஆண்டவர் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த இடம் எது?**

● ஆண்டவர் இயேசு வாழ்ந்த இடம் நாசரேத் என்னும் ஊர் ஆகும்.

**04. ஆண்டவர் இயேசுவின் பொது வாழ்வு எவ்வளவு காலம் நீடித்தது? அக்காலத்தில் அவர் செய்தது என்ன?**

●மூன்று ஆண்டுக் காலம் நீடித்தது. நற்செய்தியை அறிவித்தார் (புதுமைகள், உவமைகள்), திருச்சபையை ஏற்படுத்தினார்.

**05. ஆண்டவர் இயேசு மனித உணர்வுகள் கொண்டு செயற்பட்டாரா?**

● ஆம். அவர் மனித இயல்பு கொண்ட முழு மனிதர் எனவே அவர் மனித உணர்வு கொண்டு செயலாற்றினார்.

**06. ஆண்டவர் இயேசு கடவுள் என நாம் அறிவதெப்படி?**

● தந்தையாகிய கடவுளே இதனை வெளிப்படுத்தினார். அத்தோடு ஆண்டவர் இயேசுவும், இதைவெளிப்படுத்தினார். இயேசு தனது மரணத்தாலும் உயிர்ப்பினாலும் இதை உறுதிப்படுத்தினார்.

**07. நம்மை மீட்பதற்காக கிறிஸ்து செய்தது என்ன?**

●நம்மை மீட்பதற்காக கிறிஸ்து பாடுகள் பட்டு, சிலுவையில்அறையப்பட்டு தனது உயிரை தந்தையாகிய இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

**08. ஆண்டவர் கிறிஸ்து தன் பாடுகளாலும், மரணத்தினாலும் எடுத்துரைப்பது என்ன?**

● இறைவன் நம் மீது அதிகமாய் அன்பு கொண்டுள்ளார் என்பதும் பாவம் ஆண்டவரால் மிகவும் வெறுக்கப்படும் ஒன்று என்பதாகும்.

**09.கிறிஸ்து மரித்த பின் அவரது உடலுக்கு என்ன நிகழ்ந்தது?**

● மரித்த பின் அவரது உடல் கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது.

**10. கிறிஸ்து மீண்டும் உயிர் பெற்றது எப்போது?**

● அவரது மரணத்தின் பின் மூன்றாம் நாளாகிய பாஸ்கு ஞாயிறன்று கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்.




## விவிலியப் பகுதி




### நற்செய்தி : புனித மாற்கு

### அதிகாரம் – 09

148. அங்கு என்ன நடந்தது?
149. இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தவர்கள் யார்?
150. கூடாரங்களை அமைக்க கேட்டது யார்?
151. எத்தனை கூடாரம் அமைக்க கேட்டார்?
152. மேகத்திலிருந்து என்ன குரல் ஒலித்தது?
153. அவர்கள் ஒருவர் ஒருவரோடு எதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்?
154. அந்த தீய ஆவி அப்பேச்சிழந்த பையனுக்கு எதை உண்டாக்கியது?
155. அச்சிறுவனுக்கு தீய ஆவி வந்து எத்தனை காலம் ஆயிற்று?
156. ஆவியை இயேசு எவ்வாறு அதட்டி விரட்டினார்?
157. தீய ஆவி எதனால் வெளியேறும்?

15ம் பக்கம் தொடர்ச்சி

**ஞான ஒளி**

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**ஜனவரி 11ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.



**எஸ் விபுசனி – தரம் 6**
கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்



**டி.கிளன்சி – தரம் 6**
கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்



**ஷலோமி – தரம் 6**
கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்



**பு. அபிநயன் – தரம் 6**
கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்

## கி றி ஸ் ம ஸ்


கிறிஸ்மஸ் டிசம்பர் 25ம் திகதி இயேசுவின் பிறப்பை முன்னிட்டு கொண்டாடும் விழா. மாட்டுத்தொழுவம் அமைத்து, மரங்கள் வைத்து பல வர்ணங்களில் விளக்குகளை ஏற்றி வைப்பார்கள். இரவில் தேவாலயத்திற்கு சென்று திருப்பலியில் கலந்துக்கொள்ள வேண்டும். அன்றைய தினம் நாம் புது ஆடைகள் அணிந்து மகிழ்ச்சியாக இருப்போம்.

**ஏ. சுதர்ஷியா தரம் 7 கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்**

## கிறிஸ்மஸ் பண்டிகையின் சிறப்பு

கிறிஸ்மஸ் என்பது இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமாகும். கிறிஸ்மஸ் பண்டிகையை உலக கிறிஸ்தவர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். கிறிஸ்மஸ் பண்டிகைக்காக முதன் முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம் 1510ம் ஆண்டில் ரிகா என்ற இடத்தில் தொடங்கியது. கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் குழுக்களாக சேர்ந்து கெரோல் பாடல் நிகழ்சியை நடாத்துகின்றனர் இதில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும் அவரது பிறப்பு, அவர் உலகிற்கு வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை பாடுவது வழக்கம். கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் திருப்பலியில் பங்கெடுப்பது, குடில்கள் கிறிஸ்மஸ் தாத்தா, வாழ்த்து அட்டைகளும் பரிசுகளும் பறிமாறல், கிறிஸ்மஸ் மரத்தை அழகூட்டல், என்பன பொதுவாக அடங்கும்.

**அன்பாஸ், தரம் 6**



**அன்பாஸ் – தரம் 6**
கொ /விபுலாநந்தா த/மகா வித்தியாலயம்

## கிறிஸ்மஸ் வாழ்த்து



மாட்டுத் தொழுவத்து
மாபரன்
மண்ணுலகு மக்களின்
மனதினில்
மங்கா புகழோடு
வாழ்ந்திட
மரியின் தியாக மல்லவா
மடிந்தது
செல்ல புதல்வா சிங்கார
தலைவா
செல்வங்களை நிரப்பிட
வா
தெவிட்டாத அன்பு
வெள்ளம்
தெருவினில் பாய்ந்தோட
உருவெடுத்து வா

மண்ணுலகு மக்களின்
பாவ இருள் போக்க
விண்ணிலிருந்து இறங்கி
வந்த
நம் இயேசு பாலரை
வரவேற்போம்
அவரைப் போற்றிப்
புகழ்ந்து
கொண்டாடுவோம்
அனைவரும்

மண்ணில் வந்த
விண்ணின் வேந்தனை
போற்றி பாடிக்
கொண்டாடுவோம்
ஆர்ப்பரித்துக்
கொண்டாடுவோம்
அனைவருக்கும் இனிய
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்



**க. ஏனஸ் கனிஸ்கா**
**தரம் 7**

## வர்ணம் தீட்டுங்கள்



புதுவருட நல்வாழ்த்துக்கள்



## மாணவர் ஒளி





# உன்னோடு ஒரு நிமிடம்

## நிழலாய் ஒரு நண்பன் உண்டு

### உடைந்து போய் விடாதே நண்பா!

கலங்காதே நண்பா உன்னைப் போல் ஒருவன் உண்டு நிழலாய் உனக்கொரு நண்பன் உண்டு. உன்னைப் போலவே ஒருவன் கலங்கிப் போய் இருந்திருக்கிறான். உன்னைப் போலவே ஒருவன் கைவிடப்பட்டு நின்றிருக்கின்றான். உன்னைப் போலவே ஒருவன் எல்லாவற்றையும் இழந்து போயிருக்கின்றான்.

உன்னைப் போலவே ஒருவன் ஏமாற்றப்பட்டு நின்றிருக்கின்றான். கலங்காதே நண்பா இந்த முரட்டுப் பாதையில் முதன் முதலாய் நடப்பதாய் முணுமுணுக்க வேண்டாம். உற்றுப் பார் உறைந்து போய்க் கிடக்கும் அந்த ஒருவனின் ரத்தம்!

இந்த வனாந்தரத்தில் எப்படிக் கடப்பது என்று கசந்து நிற்காதே உற்றுப்பார்! தட்டுத்தடுமாறி சிலுவையைச் சுமந்து சென்ற அந்த சாமானியனின் காலடித் தடம் தெரியும்.

அவன் உனக்கு ஒரு மாதிரி அவன் உனக்கு ஒரு நிழல் அவன் உனக்கு ஓர் ஊன்றுகோல் அவன் உனக்கு ஓர் இளைப்பாறும் இடம் அவன் உனக்கு ஓர் ஒத்தாசை.

நண்பா மனித நேயத்தோடு வாழ்ந்து மற்றவர்களுக்காய் சாவைச் சந்தித்த மாவீரன் அவன்.

அவர் தான் என் மகன் இயேசு. தம் தெய்வத்தன்மையால் மட்டுமன்று மாறாக தமது மனிதத்தன்மையாலும் மக்களைத் தம் பக்கம் ஈர்த்தார். என் மகனின் மனிதத்தன்மைதான் மனித இதயங்களில் குடிகொள்ளச் செய்தது இல்லை என்றால் அவர் வான்மேகக் கூட்டங்களுக்கிடையே தான் வாழ்ந்திருப்பார். தம் தனித்தன்மையின் மூலம் என் மகன் மனித குலத்திற்கு அருகில் நெருங்கி வந்தது மட்டுமன்று மனித குலத்தையே தமக்கு அருகில் நெருங்கி வர வைத்துவிட்டார்.

அவர் பாவம் தவிர எல்லா நிலைகளிலும் மனிதனைப் போன்று வாழ்ந்து வந்தார். அவரின் மனிதத்தன்மையை விளக்குகின்ற மாபெரும் சக்தி நிறை நீரூற்றுக்களாக நான்கு நற்செய்திகளும் அமைந்துள்ளன. நற்செய்தியைத் தெளிந்த மனநிலையில் வாசிக்கும் பொழுது என் மகன் நூறு சதவீதம் உண்மையான மனிதர் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள். அவரின் வாழ்வென்னும் அனுபவப் பூஞ்சோலையில் நற்செய்தியாளர்கள் அவரின் மனிதத்-தன்மையைப் பற்றி எடுத்துரைக்கின்றார்கள்.

அவரின் ஒட்டுமொத்த வாழ்வை உற்றுநோக்கும்போது அவரது மனிதத்தன்மை அதிக முக்கியத்துவம் பெறுவதை நீங்கள் உணர்வீர்கள்.

**தொடரும்**

# நீங்கள் எவ்வளவு பெரியவர்?



நீங்கள் எவ்வளவு பெரியவர் என்பது உங்களுடைய ஆளுமையோடு தொடர்புடைய கேள்வி. உமது உள்மனதுள் எப்படி இருக்கிறீர் என்ற கேள்வி. மற்றவர்களுக்கு நல்வார்த்தை கூறுவதில், அன்பாகப் பழகுவதில், பாராட்டு கூறுவதில் எவ்வளவு தாராள குணமுள்ளவர் என்பது பற்றியதாகும்.

வீட்டிலிருக்கும்போது நீர் உமது பெற்றோர், சகோதர, சகோதரிகளோடு எப்படி நடந்துகொள்ளுகிறீர் என்பதுதான் உம்மை அளக்கும் அளவையாகும். நம்மில் பலர் எமது தோழர், நண்பர்கள் மத்தியிலிருக்கும்போது எம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைகிறோம். நம்முள் பலர் எமது நண்பர்கள் மத்தியில் எம்மைப்பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த பெரும்முயற்சி எடுக்கிறோம். நம்முள் சிலர் தாம் கூட்டத்தில் ஒருவராக மட்டும் கணிக்கப்-படுவதை விரும்புவதில்லை. ஆனால், நமக்கு மிக நெருக்கமானவர்களோடு இருக்கும்போதுதான் நமது சுயரூபம் வெளிப்படுகின்றது. ஆனால் வெளி உலகத்திற்கு எமது உண்மையான சுயரூபம் தெரிவதில்லை.

நீர் உண்மையில் நல்ல ஆளுமை படைத்தவரானால், நீர் இரக்க குணமுள்ளவராக, மற்றவர்மீது கரிசனை கொண்டவராக மற்றவர் மனதைப் புண்படுத்துவதை வெறுப்பவராக இருப்பீர். எவ்வேளையிலும் உதவிக்கரம் நீட்ட முன்நிற்பீர். அதைப்பற்றி மற்றவர்கள் முன் பறைசாற்றவோ பிரதிபலன் எதிர்பார்க்கவோமாட்டீர். எதைச் செய்யவேண்டுமோ அதை அமைதியாக ஆனால் உறுதியாகச் செய்வீர்.

நீர் உண்மையில் நல்ல ஆளுமை படைத்தவரானால் பிளவை ஏற்படுத்துபவராக அல்ல சமாதானத்தை ஏற்படுத்துபவராகவே இருப்பீர். மற்றவர்களைப் பற்றிக் கூறப்பட்ட அவதூறான வார்த்தைகளை பரப்பிக்கொண்டு அலையமாட்டீர். மற்றவர்களைப் பற்றி எப்பொழுதும் நல்லதையே பேசி அவர்களின் நற்குணங்களை மற்றவர்களுக்குக் காட்டுவீர்.

நீர் நல்ல ஆளுமை படைத்தவரானால் ஒவ்வொருவரையும் அவராகவே ஏற்றுக்கொள்வீர். உம்மைப்பற்றியே நினைத்துக் கொண்டிராமல் மற்றவர் நலன் பற்றி சிந்திப்பீர். அதற்கு எதிர்மாறாக குறைவான ஆளுமை படைத்தவர்கள் எளிதில் மனமுடைந்து போவார்கள். தம்மைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டு தமக்கு ஏற்படும் ஒவ்வொரு காரியத்தையும் பெரிதுபடுத்திக் கூறிக்கொண்டிருப்பர்.

பெரியவர்கள் ஒரு தீர்வை முன்வைக்கும்போது தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் தமக்கு நடப்பவற்றையும் தம்மைச் சூழ நடப்பவற்றையும் சரியான கண்ணோட்டத்திலேயே பார்ப்பார்கள். நீங்கள் உண்மையில் பெரியவர்களென்றால் அதிகமான மக்களோடு ஒத்துப்போவீர்கள். உங்களை அளவுமீறிப் பெரிதாக்கமாட்டீர்கள்.

பெரியவர்கள் தம்மைப்பற்றிய வேடிக்கையான பக்கத்தையும் எளிதில் கண்டுகொள்வர். அவர்களது நகைச்சுவை தேவையற்ற விடயங்களை நிவர்த்திசெய்வது மாத்திரமல்ல, தம்மைச் சூழ வாழ்பவர்களோடு மகிழ்ச்சியாக வாழ அவர்களை உற்சாகப்படுத்தவும் வழிவகுக்கும்.

**அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.**



# நானும் செல்வேன் என் தேவனைக் காண...




உலகைப் படைத்த தேவனுக்கு
உயிர் தந்த நாதனுக்கு
உறங்க உறையுள் யார் தருவார்?
படைப்பனைத்தும் விழித்திருக்க
பரமன் வருகையை வரவேற்க
மனிதன் மட்டும் இன்னும் உறங்குகின்றான்

மனிதருக்கு கிடைக்காத பெரும் பாக்கியம்
மாடுகளுக்கு கிடைத்தது.
மனிதர் அவரை வெறுக்க
மற்றவையெல்லாம் வரவேற்க
மண்ணகம் விண்ணகம் மனம் மகிழ
மா மரி வயிற்றில் பாலகனாய் பிறந்தார்.



குழந்தையின் முகம் காண ஞானியர் வந்தனர்.
இடையர்களும் ஓடோடி சென்றனர்
வானத்து விண்மீன்கள் தலை வணங்கின.
பறவையினங்கள் இசைப் பாடின.

நான் மட்டும் இங்கிருக்கின்றேன்
பாவம் நிறைந்த உள்ளத்தோடு
எதை கொண்டு செல்வேன்
என் தேவனைக் காண
தூய உள்ளத்தை
தூயவருக்கு காணிக்கையாக்குவேன்.



P.M. மேரி பெனடிக்கா, பென்ரித், அவிசாவளை

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි

புதுவருட நல்வாழ்த்துக்கள்








வத்திக்கானிலிருந்து திருத்தந்தை

# திருத்தந்தை, வத்திக்கான் திருப்பீடப் பணியாளர்களை சந்தித்தார்

புன்னகையின் முக்கியத்துவத்தைக் கண்டுணருங்கள் புதிதாகப் பிறந்துள்ள குழந்தையைக் காண்கையில், அதைப் பார்த்து நாமும் புன்னகை புரிகிறோம், அக்குழந்தையும், தனது பார்வையால் அதற்குப் பதிலளிக்கின்றது, அக்குழந்தையின் புன்னகை, மிகுந்த வல்லமை மிக்கது என்று கூறியத் திருத்தந்தை, அப்புன்னகை, ஊற்றுத் தண்ணீர் போல புதியதும், தூய்மையானதும் ஆகும், இன்னும், அது நம் குழந்தைப்பருவத்தின் மீது ஏக்கத்தை எழுப்புகின்றது என்றும் கூறினார். கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்டு ஆசீர் பெறுவதற்காக, புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில், நண்பகலில் காத்திருந்த, வத்திக்கான் மற்றும், திருப்பீடத்தின் பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றுவோரைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் வாழ்வில் புன்னகையின் முக்கியத்துவம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டார்.

### புன்னகை நாடு

கடந்த மாதத்தில், இறுதியாக தான் திருத்தூதுப்பயணம் மேற்கொண்ட நாடுகளில் ஒன்றான தாய்லாந்திலிருந்து, புன்னகை பற்றிய சிந்தனை எழுந்தது என்றுரைத்த திருத்தந்தை, தாய்லாந்திலுள்ள மக்கள், மிகுந்த புன்முறுவலுடன் உள்ளதால், இவ்வாறு அந்நாடு அழைக்கப்படுகின்றது என்றும், அம்மக்களிடம் விளங்கும் சிறப்பான கனிவு, பெருந்தன்மை போன்ற நற்புண்புகள் அனைத்தும் அவர்களின் முகங்களிலும், செயல்களிலும் பிரிதிபலிக்கின்றன என்று கூறினார்.

### இயேசு, கடவுளின் புன்னகை

அன்னை மரியா, யோசேப்பு மற்றும், இயேசுவுக்கு இடையே இந்த புன்னகை தனித்துவமிக்க முறையில் விளங்கியது, இயேசு கடவுளின் புன்னகை என்றும், இறைத்தந்தை நம்மீது கொண்டுள்ள அன்பை, நன்மைத்தனத்தை வெளிப்படுத்துவதற்காக மனிதராய்ப் பிறந்த இயேசுவின் புன்னகையில், கன்னி மரியாவும், புனித யோசேப்பும், தங்கள் மீதும், இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்தோர் மீதும் வைத்துள்ள கடவுளின் கருணையை கண்டுகொண்டனர் என்றும், திருத்தந்தை கூறினார்.

தீவனத்தொட்டியில் குழந்தை இயேசுவை நாம் காண்கையில் இதே அனுபவத்தை மீண்டும் வாழ்கிறோம் எனவும், நம்மிலுள்ள சிறந்தவற்றை மற்றவருக்கு வழங்குவதற்குத் தடைசெய்யும் அனைத்திலிருந்தும், குழந்தை இயேசுவின் புன்னகை நம்மைத் தூய்மைப்படுத்துவதாக என்றார். நாளின் அதிகமான நேரங்களை வேலைகளில் செலவழிக்கிறோம், எனினும், வேலையின் தரம், குறிப்பாக, திருஅவைக்கும், கிறிஸ்துவின் பெயராலும் பணியாற்றுகையில், நாம் வாழும்முறை, மனித உறவுகளின் தன்மை போன்றவற்றைச் சார்ந்துள்ளது என்றும் திருத்தந்தை கூறினார்.

### கடவுளின் புன்னகை

பல்வேறு காரணங்களுக்காக, சிலநேரங்களில் புன்னகை புரிய கடினமாக மாறுகிறது, அச்சமயத்தில் நமக்கு கடவுளின் புன்னகை தேவைப்படுகின்றது, இதற்கு நம் ஒரே மீட்பராகிய இயேசுவால் மட்டுமே நமக்கு உதவ முடியும், சிலவேளைகளில், அவரை நம் வாழ்வில் தெளிவாக அனுபவிக்கின்றோம் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

நம் வாழ்வின் நிகழ்வுகள் எல்லாம் சரியாகச் சென்றுகொண்டிருக்கையில், பாதுகாப்பாக இருப்பதாக உணருகின்றோம், துன்புறுவோரை மறக்கின்றோம், அந்நேரத்தில் நம் போலியான பாதுகாப்பை அகற்றுவதற்கும் கடவுளின் புன்னகை தேவைப்படுகின்றது என்றும் திருத்தந்தை கூறினார். கிறிஸ்மஸ் பெருவிழா திருவழிபாட்டில் கலந்து கொண்ட எல்லாருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.

# நாம் நல்லவர்களாக மாறும்வரைக் காத்திருந்து, பின்னர் தன்னை அவர் கொடையாக வழங்கவில்லை, மாறாக, எவ்வித நிபந்தனையுமின்றி அவர் தன்னையே வழங்கினார்

## கிறிஸ்மஸ் இரவு திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை

இயேசு, கிறிஸ்மஸ் இரவில், தன்னையே ஒரு கொடையாக வழங்கினார். நாம் நல்லவர்களாக மாறும்வரைக் காத்திருந்து, பின்னர் தன்னை அவர் கொடையாக வழங்கவில்லை, மாறாக, எவ்வித நிபந்தனையுமின்றி அவர் தன்னையே வழங் கினார். திருப்பலியின் ஆரம்பத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பெருங்கோவிலில் வைக்கப்பட்டிருந்த குழந்தை இயேசுவை வணங்கி முத்தம் செய்தபோது, பன்னிரு நாடுகளின் பாரம்பரிய உடைகளை அணிந்திருந்த சிறுவர், சிறுமியர் அவரைச் சுற்றி நின்றனர். அவர்களில், ஈராக், மற்றும் வெனிசுவேலா நாடுகளை பிரதிபலிக்கும் உடைகளில் இரு குழந்தைகள் நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மறையுரையின் சுருக்கம்:

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா9:2). இன்றைய முதல் வாசகத்தில் கூறப்பட்ட இந்த இறைவாக்கு, நற்செய்தியில் நிறைவேறியது. இடையர்கள் இந்த ஒளியைக் கண்டனர். ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது (லூக் 2:9). இருளில் ஒளி தெரிந்தது என்பதன் பொருள் என்ன? அது இறைவனின் அருள் என்று, திருத்தூதர் பவுல் கூறியுள்ளார்.

மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. (தீத்து 2:11) கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. நாம், நமது வேலைகளில், வழக்கம்போல் மூழ்கியிருந்த வேளையில், கடவுள் தன்னையே தாழ்த்தி, நம்மிடையே வந்தார். நம் ஒவ்வொருவரையும் நோக்கி அவர் கூறுவது இதுதான்:

நீ என் கண்களில் விலையேறப்பெற்றவர். உன்னை நான் எப்போதும் அன்புகூருவேன் அவர் கண்ணைப்பறிக்கும் ஒளியுடன் வரவில்லை, மாறாக, வறுமையில் பிறந்து, தன் அன்பின் செல்வத்தால் நம்மை வென்றார். எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தி இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தி அறிவிக்கப்பட்ட இடையர்கள் புனிதர்கள் அல்ல, அந்தக் குழுவில் நாமும் ஒருவராக இருக்கிறோம். இடையர்களுக்கும், நமக்கும், அஞ்சாதீர்கள் (லூக். 2:10) என்று கடவுள் கூறுகிறார். அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, இத்தகைய அருள் நம்மை வந்தடை யும்போது நாம் என்ன செய்யவேண்டும்? அந்தக் கொடையை வரவேற்கவேண்டும். நாம் கடவுளைத் தேடிச் செல்வதற்கு முன், அவர் நம்மைத் தேடிவருவதற்கு அனுமதிக்கவேண்டும். நமது திறமைகளைக் கொண்டு தொடங்குவ தற்குப் பதில், அவரது அருளில் தொடங்க வேண்டும். அவர் நம்மீது கொண்டுள்ள மட்டற்ற, மதியற்ற அன்புக்கு முன், எந்த சாக்குபோக்கும் சொல்ல இயலாது. கிறிஸ்மஸ் காலத்தில் எழும் கேள்வி இதுதான்:

கடவுளால் அன்பு கூரப்படுவதற்கு நான் என்னையே அளிக் கிறேனா? என்னைக் காக்கவரும் அந்த அன்புக்கு முன் நான் சரணடைகிறேனா? இத்தகைய பேரன்புக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். ஆனால், நம் வாழ்வு, நன்றி உணர்வின்றி செலவழிக்கப்படுகிறது. இயேசு என்ற கொடையை நாம் வரவேற்று, அவரைப்போல் நாமும் ஒரு கொடையாக மாறுகிறோம். முதலில், நாம் மாறுகிறோம். அதன் வழியே, வரலாற்றை, திருஅவையை மாற்றுகி றோம்.இதைத்தான், இயேசு இன்று இரவு நமக்குச் சொல்லித் தருகிறார். அவர், இவ்வுலகில் வந்தபோது, யார் மீதும், தன்னையும், தன் கொள்கைகளையும் திணிக்காமல், தன்னையே ஒரு கொடையாக வழங்கினார். எவ்வித நிபந்தனையுமின்றி அவர் தன்னையே வழங்கினார்.

இடையர்களைப் பற்றி கூறப்படும் அருள்மிக்கதொரு பாரம்பரியக் கதை உண்டு. குழந்தை இயேசுவைக் காணவந்த இடையர்கள் ஒவ்வொருவரும் பல பரிசுகளை வழங்கினர். அந்தப் பரிசுகளை வைக்க இடமின்றி அன்னை மரியாவும், யோசேப்பும் தடுமாறினர். குழந்தை இயேசுவைத் தாங்கி நின்ற அன்னை மரியாவின் கரங்கள் பரிசுகளால் நிறைந்தன. அவ்வேளையில், ஒரே ஓர் இடையர் மிகவும் ஏழ்மையில் இருந்ததால், அவரால் எதுவும் கொடுக்க முடியாமல், ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட அன்னை மரியா, அவரை அருகில் அழைத்து, தன் கரங்களில் இருந்த குழந்தை இயேசுவை அவர் கரங்களில் ஒப்படைத்தார்.

தான் எதுவும் கொணரவில்லையே என்று வெட்கித் தலை குனிந்திருந்த இடையரின் கரங்கள், கடவுளைத் தாங்கிய தொட்டிலாக மாறின. அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, உங்கள் கரங்களில் ஒன்றுமில்லை என்று தோன்றினால், உங்கள் இதயம் வெறுமையாக இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், இதுதான் உங்கள் இரவு. இன்று, கடவுள் உங்கள் கரங்களில், இதயங்களில் தன்னையே வழங்குகிறார். அவரை ஏற்றுக்கொள்ளுங்கள், கிறிஸ்மஸ் ஒளி உங்களில் ஒளிரட்டும்.

திருப்பலியின் இறுதியில், பாரம்பரிய உடையணிந்த குழந்தைகள் புடைசூழ, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குழந்தை இயேசுவை சுமந்து சென்று, புனித பேதுரு பெருங்கோவிலில் உருவாக்கப்பட்டிருந்த குடிலின் அருகில் வைத்தார்.

## முதிய வயதிலும் மற்றவர்களுக்கு நம்மை அர்ப்பணித்து செயல்படும்போது, நம் தனிமை விரட்டப்படுவதுடன், மனதளவிலும் நாம் உறுதியுடன் இருக்க உதவுகின்றது என்றார் திருத்தந்தை

சமுதாயத்தில், முதியோர், ஒரு சுமையல்ல, மாறாக, வளம்

முதிய வயதிலும் மற்றவர்களுக்கு நம்மை அர்ப்பணித்து செயல்படும்போது, நம் தனிமை விரட்டப்படுவதுடன், மனதளவிலும் நாம் உறுதியுடன் இருக்க உதவுகின்றது என்றார் திருத்தந்தை.

சமுதாயத்தில், முதியோர், ஒரு சுமையாக நோக்கப்படாமல், ஒரு வளமாகவும் கொடையாகவும் நோக்கப்படவேண்டும் என அழைப்புவிடுத்தார்,

முதிய பணியாளர்களின் இத்தாலிய தேசிய இயக்கம் தன் 70ம் ஆண்டு நிறைவை சிறப்பிப்பதையொட்டி, தன்னைச் சந்திக்க வத்திக்கானுக்கு வந்திருந்த அவ்வியக்கத்தின் அங்கத்தினர்களுக்கு உரையாற்றிய திருத்தந்தை, முதுமை என்பது, உரையாடல், மற்றும், கொடையின் காலம் என, அவ்வியக்கத்தின் தலைவர் எடுத்துரைத்ததை மையப்படுத்தி தன் உரையை வழங்கினார்.

பணியாற்றுபவருக்கும், பணிபெறுபவருக்கும், பலன்தரும் வகையில், முதியோர், தங்கள் வாழ்வின் சில மணி நேரங்களை, சுய விருப்பப் பணியாளர்களாக செலவிட்டுவருவது குறித்து, தன் மகிழ்ச்சியையும் கூறி, அண்மைக் காலங்களில் முதியோர், ஒருமைப்பாட்டுணர்வுடன், சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதைக் காண முடிகிறது என்று கூறினார்.

அனுபவங்களையும் உள்ளடக்கிய முதியோரின் கனவுகள் இளையோரின் வாழ்க்கைப் பயணத்தில் முக்கியமானவை எனவும் கூறினார், திருத்தந்தை.

நீதியும், அழகும், ஆதரவும், கிறிஸ்தவமும் நிறைந்த ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, முதியோருக்கும், இளைய சமுதாயத்திற்கும் இடையே இடம்பெற வேண்டிய உரையாடலின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித குடும்பம் மேற்கொண்டுள்ள பயணத்தின் பலமாக இருக்கும் இளையோரின் திறனை, முதியோரின் கடந்த கால நினைவுகளும், ஞானமும், மேலும் பலப்படுத்துகின்றன என எடுத்துரைத்தார்.

முதுமையின் காலம் என்பது, பிறருக்காகப் பரிந்துரைக்கும், மற்றும், உதவித் தேவைப்படுவோருடன் அருகிருக்கும் காலம், ஏனெனில், முதியோர், மற்றவர்களின் பிரச்சனைகளை எளிதில் புரிந்துகொண்டு தீர்வுக்கு உதவமுடியும் என மேலும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

2010 - 2020

புதுவருட நல்வாழ்த்துக்கள்



475வது ஆண்டு நிறைவில்...

# மன்னார் மறைசாட்சிகள் 06

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### மன்னார் மாதோட்ட வரலாறு

### 2.2.1. மன்னார் தூதுக் குழுவினரும் புனித சவேரியாரும்

புனித பிரான்சீஸ் சவேரியார் 1544 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்தியாவில் கிறிஸ்தவ மறையைப் போதித்துக் கொண்டிருந்த போது மன்னார்த் தீவிலிருந்த கரையார் சமூகத்தவர்கள் தூதுக்குழுவினரை அவரிடம் அனுப்பி தமக்கு வந்து போதித்து ஞானஸ்நானம் தரும்படி அழைப்புவிடுத்தனர். புனித பிரான்சீஸ் சவேரியார் தூத்துக்குடியில் முக்குவ சமூகத்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த படியினால் மான்சில்காஸ் என்னும் இயேசு சபைக் குருவை மன்னார்த்தீவுக்கு அனுப்ப முயற்சித்தார். இம்முயற்சி கைகூடாமல் போகவே தமக்குப் பதிலாக பணிபுரிய நியமித்திருந்த பிரான்சீஸ் சவேரியார் என்ற தமது நாமத்தைக் பூண்டிருந்த திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். Schurharmer: 1977: 460 )

### 2.3. திருத்தொண்டரின் வருகையும் மன்னார் மக்களின் மதமாற்றமும்

பிரான்சீஸ் சவேரியார் என்ற திருத்தொண்டர் புனித பிரான்சீஸ் சவேரியாரின் அனுமதியுடனும் ஆலோசனையுடனும் மன்னார்த்தீவை அடைந்தார். மன்னார் மக்கள் அவரை மகிழ்ச்சியாக வரவேற்றனர். பின்னர் கத்தோலிக்கத் திருச்சபையின் வழக்கமான முறைப்படி மறைக்கல்வியை அவர்களுக்குப் புகட்டினார். அதன் பின்னர் கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு மேல் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற அவர்களுக்கு இருந்த ஆர்வம் அவர்களின் கத்தோலிக்க விசுவாசத்தின் அடித்தளமாக அமைந்தது. திருத்தொண்டர் மன்னார் மக்களுக்கு கத்தோலிக்க திருச்சபையின் வழமையான முறைப்படி ஞானஸ்நானம் வழங்கினார். கொல்லப்பட்ட 600க்கும் 700க்கும் இடைப்பட்ட வேதசாட்சிகளைத் தவிர ஏனையோர் பெருநிலப்பரப்பிற்கு தப்பியோடிவிட்டனர்.

### 2.4. யாழ்ப்பாண அரசரும் மன்னார் மக்களின் சாட்சிய மரணமும்

மன்னார்த்தீவில் வாழ்ந்த சைவ மக்கள் கிறிஸ்தவ சமயம் மாறியதை அறிந்த 'யாதவர்' என்ற திருக்கேதீஸ்வர சைவகுருக்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகராக விளங்கிய நல்லூருக்குச் சென்று சங்கிலி மன்னனுக்கு அறிவித்தனர். உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் வெகு விரைவில் ஆட்சியை இழக்க நேரிடும் என்று கூறினர். (Queyroz : traslstion SJ Perara 1930: 243) மன்னார் தீவானது 1516 1561 வரை யாழ்ப்பாண அரசர் 7ஆம் செகராசசேகரன் என்னும் சங்கிலியின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. மன்னார் மக்களின் மதமாற்றத்தைக் கேள்விப்பட்டதும் அவர்களைப் பெரும்பாலும் பயப்படுத்துவதற்காக 5000 படைவீரர்களை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். ஐயாயிரம் படைவீரர்களில் அரைவாசிப் பேர் யாழ்ப்பாண பட்டணத்திலிருந்தும் அரைவாசிப் பேர் பெருநிலப்பரப்பின் கரையோரத்திலிருந்தும் மன்னார்த்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களது வருகையைக் கேள்விப்பட்ட கரையார் தமது வள்ளங்களில் தப்பியோடி விட்டனர் (Rayanna :1964: 44) இக்கலாபனையினால் சிதறுண்ட கிறிஸ்தவர்கள் சிலர் மாந்தை என்னும் இடத்திற்குக் குடியேறி அங்கு தேவதாயாரின் பேரில் ஒரு தேவாலயத்தைக் கட்டினர். (சமுகஜோதி : 13 -15) சிலர் பட்டிக்காட்டில் அரசனின் போர்வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

போர்வீரர்கள் எவ்வித இரக்கமும் காட்டாமல் வயது, பால், ஆண், பெண், குழந்தைகள் என்று பாராமல் 'ஞானஸ்நானம் பெற்றேன்' என்று கூறிய அனைவரையும் வாழுக்கு இரையாக்கினார்கள். ஒவ்வொருவரிடமும் 'நீ கிறிஸ்தவனா?' என்ற ஒரு கேள்வி மட்டுமே கேட்கப்பட்டது. 'ஆம்' என்று கூறிய அனைவரையும் சிரைச்சேதம் செய்தார்கள். சிறுவர் குழந்தைகளுக்காக பெற்றோர் பதிலளித்தனர். இராணுவ வீரர்கள் பட்டித்தோட்டத்தில் 600க்கும் 700க்கும் இடைப்பட்ட கிறிஸ்தவர்களைக் கொன்றனர். இம் மன்னார் மக்களின் இந்த விசுவாசம் அதிசயிக்கத்தக்கதாகும். இவ்வாறு

தொடரும்.....

# மெசஞ்சர் பத்திரிகையின் 150வது ஆண்டு நினைவலைகள் சில!

சென்ற இதழின் தொடர்ச்சி....

பின் நாங்கள் புனித பேர்னாட் குருமடத்தில் (தற்போதைய அக்குவைனாஸ் கல்லூரி) இருந்த காலத்தில் அங்கு ஒரு பத்திரிகையை அச்சிட்டோம். "லக்ஸ் முண்டி" (Lux Mundi) என்ற அந்த பத்திரிகை தயாரிப்பில் நானும், என்னுடன் சகோதரர்களான ஜோ. நெதிசிங்க, ஏர்னஸ்ட் போருந்தோட்டா, எச்.டான் அன்செலீம், செலஸ்டின் ஜெயசிங்க மற்றும் சிலர் இருந்தனர். இதனால் அச்சகத்துடனான எமது தொடர்பு இன்னும் ஆழப்பட்டது. அடிக்கடி அச்சகம் செல்ல நேர்ந்தது. அந்த நேரம் அங்கிருந்த தொழிலாளர்கள் மற்றும் குறிப்பாக ஜோன் பிலிப் செல்லம்பரம் என்ற மனிதர் போன்றோர் எங்களுக்கு மிகவும் உதவினார்கள்.

எங்கள் குருமடத்தில் ஒரு குழுவினர் புத்தக ஒட்டுதல் பணியை செய்யவிருந்தது. அதில் நானும் ஒருவன். அச்சிடல் பணியை தவிர புத்தக ஒழுங்கமைப்புப் பணிக்காக நாங்கள் அச்சகத்தை அடிக்கடி சந்தித்தோம். மேலும், என்னோடு சிலர் புகழ்பெற்ற ஆசிரியர் அருட்பணி. ஜஸ்டின் பெரேரா அவர்களை சந்திக்கவும், அச்சகத்தை நாடினோம். ஏனெனில் இவரே புனித வளனார கல்லூரியில் எங்களுக்கு வழிகாட்டியவர்.

1955ம் ஆண்டு நாங்கள் கண்டி தேசிய குருமடத்திற்கு பயிற்சிக்காக சென்றோம். இக்காலத்தில் மருதானை - பொரள்ளை வீதி, பேராயர் இல்ல நிலத்திலிருந்து பெறப்பட்ட ஒரு பகுதி நிலத்தைக் கொண்டு அகலமாக்கப்பட்டது. இதனால் இந்த அச்சகத்தின் முன் பகுதி இடிக்கப்பட்டு புதிய கட்டிடத் தொகுதி நிர்மானிக்கப்பட்டது. இது ஒரு ஆசீர்வாதமாகும். ஏனெனில், அச்சகம் ஒரு புதிய தோற்றத்தையும் அனைவரின் வரவேற்கையும் பெறத் தொடங்கியது. அதேவேளை, தொடக்கத்திலிருந்து அச்சிடப்பட்ட பத்திரிகைகளின் பிரதிகள் இக்காலத்தில் தெரியாமல் எரிக்கப்பட்டமை ஒரு துயரமான விடயமாகும்.

அக்காலத்தில் அச்சகத்திற்கு முன்னாள் "டிராம்கார்கள்" (Tramcars) ஓடிக்கொண்டிருந்தன. இன்று காணப்படும் வீதியில் பாதி அளவே அன்று காணப்பட்டது. இதனை அடுத்து அப்போதைய கொழும்பு மேயராக இருந்த, டாக்டர். எல். எம். பெரேரா டிராலி பேரூந்துகளை (Trolle Buses) அறிமுகப்படுத்தலானார். பொரள்ளை சந்திக்குப் பிறகு இந்த டிராலி பேரூந்துகள் எங்கள் அச்சகத்திற்கு முன்னாள் நிறுத்தப்பட்டன. அப்போது பேரூந்து நடத்துனர் "பிரதீப்பயா லங்கா பஹின்டா" என கூச்சலிடுவதால் அது அச்சகத்திற்கு மாபெரும் விளம்பரமாக காணப்பட்டது. இந்த அச்சகத்தின் முகாமையாளர்களாக, அருட்பணி. டோச்செயன், அருட்பணி. செவரினஸ் பெர்னாண்டோ அ.ம.தி, அருட்பணி. ஸ்டெனிஸ் போஸ் எம் பெர்னாண்டோ அ.ம.தி, எழுத்தாளராக அருட்பணி. மணிக் முத்துகுமார, "ஞானர்த்த பிரதீப்பயா" பத்திரிகையின் முகாமையாளர்கள் அருட்பணி. இக்னேஷியஸ் கம்லாத், அருட்பணி. டொமினிக் ஆனந்தப்பா, மேலாளராக அருட்பணி. ஸ்டெனிஸ்லோஸ் எம். பெர்னாண்டோ, ஆகியோர் முறையே காணப்பட்டனர்.

1960ஆம் ஆண்டு வைகாசி மாதம் நான் கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராக நியமிக்கப்பட்டேன் அச்சத்துடனான எனது நேரடித் தொடர்பு இத்தருணத்திலேயே தொடங்கியது. அதேநேரம் அருட்பணி. ப்ரெங் எம். பெர்னாண்டோ (பின்னர் சிலாப மறைமாவட்ட ஆயர்) "ஞானர்த்த பிரதீப்பயா" பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்தும் அருட்பணி. மணிக் முத்துக்குமார். "த கெத்தலிக் செமஞ்சர்" பத்திரிகையின் ஆசிரிரயாக இருந்தார். நாங்கள் அனைவரும் நட்புறவில் செயற்பட்டதோடு, நாட்டின் அன்றைய நிலைமையும் அச்சகம் மற்றும் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு பங்களித்தது.

1956ஆம் ஆண்டு ஐ. தே. கட்சி ஆட்சி மாற்றமடைந்து ஆட்சியானது, எம்.ஈ.பி (எஸ். எல்.எம். பி. மாஜன எக்ஸத் பெருமுன) பக்கம் சென்றதுடனும், இதே ஆண்டின் புத்த ஜெயந்தி கொட்டாட்டத்துடன் கத்தோலிக்க எதிர்ப்பு போக்கு உருவானது. இவ்வேளை, ஆயுதப்படைகளின் தலைவர்களும், பொதுப்பணி ஊழியர்களும் கத்தோலிக்கர்களாக காணப்பட்டனர். இது ஒரு கத்தோலிக்க கல்வின் விளைவு என கருதலாம்.

பாடசாலைகளைக் கைப்பற்றுவது 1960ம் ஆண்டுத் தொடங்கியது. இச்செய்கைக்கு சக்தி-வாய்ந்த எதிர்ப்பாக மெசஞ்சர் மற்றும் ஞானார்த்த பிரதீபய விளங்கியது. இதனால் அன்றைய அரசாங்கம் கத்தோலிக்கப் பத்திரிகைகள் மீது கசப்பாகவே காணப்பட்டது. அரசாங்க அதிகாரிகள் தங்கள் விருப்பம் போல் பத்திரிகை ஒதுக்கீடுகளை வழங்கினர். இதனால், எங்கள் பத்திரிகைகளுக்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டன. எங்கள் பத்திரிகைகள் உதவியிழந்து நின்றது. ஆனாலும், இறைப் பராமரிப்பால் மேலெழுந்தது. சிலாபம் மறைமாவட்ட ஆயர் மேதகு. எட்மன்ட் பீரிஸ், அவர்களின் புனித பேதுரு அச்சகத்திற்கான முழு ஒதுக்கீட்டையும் எமக்கு அளிக்குமாறு உத்தரவிட்டார். அவர்களின் அச்சிடல் பணியையும் சிலாபத்தில் நிறுத்தினார். எங்கள் அச்சக விவகாரம் பாடசாலைகளை கைப்பற்றல் விவகாரத்தில் உச்சம் கண்டதால் இன்னும் அதிக தேவைகள் எங்கள் அச்சகத்திற்கு காணப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் 'தவச" (Dawasa) பத்திரிகைக் குழுமத்தின் தலைவர் திரு. செபாலா குணசேனா எனது நல்ல நண்பராக இருந்தார்.

தொடரும்.....




# ஆலயம் அறிவோம்...
# புனித லூசியாள் பேராலயம்
01




ஆக்கம் : ஜே. ஏ. ஆர். ரஞ்சிற் பெர்னாண்டோ

கொட்டாஞ்சேனை என்றதுமே அனைவரினதும் மனக்கண்களிலே அனேகமாக சந்தேகமின்றித் தோன்றுவது அதன் மத்தியிலே தென்படும் அதிகம் கம்பீரமாகவும் அழகாகவும் உயர்ந்து நின்று காட்சியளிக்கும் புனித லூசியாள் பேராலயமாகும். இது இங்கே வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும், ஒரு வேளை "நாம் தவறுதலாக ரோமாபுரியிலுள்ள வத்திக்கான் புனித பேதுருவின் பேராலய பசிலிக்காவுக்கு (St. Peter's Basillica, Vaticadnd Rome) வந்து விட்டோமோ என்னமோ" என்று நினைக்க வைக்கும். ஏனெனில் இது ஐரோப்பிய நேர்த்திமிகு கட்டிடக்கலையான 'கோத்திக் கட்டிடக்கலையம்சம் (Gothic Arehitachure) பொருந்திய கட்டிடமாக மிகப் பிரமாண்டமான முறையில், ரோமாபுரியில் வத்திக்கான் புனித இராயப்பர் பேராலயம் பசிலிக்காவைப் பிரதிபலிக்கும் சிறிய அளவு (Miniature) கட்டிடமாக கொழும்பு மாநகரின் வடகிழக்குப் பகுதியில் 18.240 சதுர அடியின் பரப்பினுள் 151 அடி உயரத்தோடு தனது சேவையை கத்தோலிக்க மக்களுக்கும் குறிப்பாக கொட்டாஞ்சேனையின் பங்கு மக்களுக்கும் அவர்களது ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது என்றால் அது மிகையாகாது. ஆயினும் அதன் எழுச்சியையும் வளர்ச்சியையும் ஆராய்ந்து பார்ப்பது ஓர் மிகக் கடினமான, சுவாரசியமான அனுபவமாகும்.

17ம் நூற்றாண்டின் மத்தியில் போர்த்துக்கேய ஆட்சியாளர்களின் வெளியேற்றத்திற்குப் பிறகு இலங்கையை கைப்பற்றிய ஒல்லாந்த ஆட்சியாளர்களினால் கத்தோலிக்கர்களின் மத அனுஷ்டானம் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டது. அவ்வேளையில் புனித பிலிப்நேரியாரினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரட்டோரியன் (Oratiorian) சபையின் தைரியம் மிக்க சில அர்ப்பணமிக்க கத்தோலிக்க குருமார் ஒல்லாந்த டச்சு அரச அதிகாரிகளை அணுகி எப்படியோ 10 ஏக்கர் அளவு கொண்ட ஓர் காணியை மானியமாகப்பெற்று கி.பி.1779ம் ஆண்டு ஓர் சிறிய குடிசைக் கோவிலை அமைத்து அதை 'விண்ணேற்பு அடைந்த பரலோக மாதா" விற்கு (Our Lady of Amuption) அர்ப்பணித்தனர். பின்பு கி.பி 1782ம் ஆண்டு ஒரட்டோரியன் சபையின் குரு முதல்வர் (Superior of the ortoriam Congregation) வண. பிதா நிக்கலஸ் தொட்ரீகஸ் அவர்கள் அந்தக் குடிசைக் கோவிலை செங்கள்களினாலும் சுண்ணாம்புக் கலவையினாலும் விருத்தி செய்தார். பிறகு கி.பி.1796ம் ஆண்டு இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்து டச்சு ஆட்சியாளர்களுக்கும் அவர்களை ஆக்கிரமைப்பு செய்ய உள்நுழைந்த ஆங்கிலேய போராளிகளுக்கும் இடையே களனி ஆற்றின் கரையோரப் பிரதேசங்களில் மூண்ட யுத்தத்தின் காரணமாக பெருமளவிலான மக்கள் இந்த 'விண்ணேற்பு பரலோக மாதாவின்" கோயிலுக்குள் அடைக்கலம் புகுந்தனர். ஆகவே இந்தக் கோயில் அவ்வேளையில் ஓர் 'அகதி முகமாக" மாறி மக்களுக்கு தஞ்சம் அளித்தது.

கி.பி 1820ம் ஆண்டில் ஒல்லாந்தரை விரட்டி வெற்றிவாகை சூடிய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கத்தோலிக்க மக்களுக்கு, கத்தோலிக்கத்தை பின்பற்றும் மதச்சுதந்திரத்தையும் சமூக அந்தஸ்தையும் அளித்தனர். இதன் விளைவாக ஆரம்ப காலத்தில் கத்தோலிக்க மறைபரப்புக் குருவாக பணியாற்றிய வண. பிதா. மொர்டீசோ டி செற்றுலால் (Fr. Mohteriro de Setuvel) அவர்களின் உடல் இந்தக் கோவிலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. கி. பி. 1834ம் ஆண்டு வரையில் இந்த கத்தோலிக்க ஆலயமானது இந்தியாவின் கோவா பட்டினத்தின் பேராயரின் அதிகார ஆதிக்கத்துக்கு உட்பட்டும் கொச்சின் ஆயரின் கீழும் (Under the Jurisdiction.the Archbisop of Goa and Under the Bishoprie of Cochin. India) இயங்கியது. பின்பு 21ம் திகதி ஏப்ரல் மாதம் 1834ம் ஆண்டு 16வது கிரகோரி பாப்பரசர் (Pope Grogory the 16th) இவ்வாலயத்தை இந்திய நிர்வாகத்தில் இருந்து பிரித்து வண. பிதா. வின்சென்றே ரொசாரியோ டயஸ் (Fr. Vinceute Rogario Dias) என்பவரை இலங்கையின் அப்போஸ்தலிக்க குருவாக" (Vicar Apostolic of Ceylon) நியமித்தார். 14ம் திகதி ஜனவரி மாதம் 1838ம் ஆண்டு இந்த 'விண்ணேற்பு மாதாவின் ஆலயமானது, இத்தாலியில் உள்ள சைரக்யூஸ் (Syracuse of Italy) நகரின் கன்னியும் வேதசாட்சியுமான 'புனித லூசியா'வுக்கு அர்ப்பணிக்கப்பட்டதுமன்றி இது இலங்கையின் முதல் பேராலயம் என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. 1846ம் ஆண்டிலே அருட் பணி. வின்சென்றே ரொசாரியொ டயஸ் இலங்கையின் முதல் ஆயராக உயர்த்தப்பட்டார்.

1852ம் ஆண்டு இந்தப் பழைய ஆலயத்திற்குப் பதிலாக ஒரு புதிய ஆலயம் கட்டுவதற்கான அஸ்திவாரம் போடப்படடது. 1858ம் ஆண்டு பின்பு கொழும்பு ஆயராக பொறுப்பேற்ற மொன்சிங்கோர் ஹில்லேரியன்



சில்லானி (Mgr. Hillariosillani) என்பவர் தமது இணை வடிவமைப்பாளரான (Co.derigner) அருட்பணி. ஸ்டனிஸ்லாவுஸ் டபரானி (Fr. Stauialaur Tabarrani) என்பவருடன் இலங்கைக்கு வந்து ஆலயத்தின் புது கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு திட்டமிட்டார். அதன் விளைவாக இவ்வாலயம் மீண்டும் 08ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1873ம் ஆண்டு இடிக்கப்பட்டு அதே வருடத்திலே மீண்டும் ஒரு புதிய ஆலயத்திற்கான அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டது. அருட்பணி. ஸ்டானிஸ்லாவுஸ் டபரானியும் ஒருவர் பின் ஒருவராக இறையடி எய்தியதால் பிறகு அருட்பணி. பல்டோனி (Fr. B.Baldoni) தொடர்ந்தும் கட்டுமானப்பணிகளை மேற்கொண்டு ஆலயம் பூர்த்தியாவதற்கு முன்பே 05ம் திகதி ஆகஸ்ட்மாதம் 1881ம் ஆண்டு மொன்சிஸ்கோர் கிளமென்ற் பங்ஞானி (Mgr. Clemant Paugnnani) என்பவரைப் கொண்டு இவ்வாலயத்தை ஆசீர்வதித்து பொது மக்களின் வழிபாட்டுக்காகத் திறந்து வைத்தார். 1887ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இவ்வாலயமானது 13ம் திகதி டிசம்பர் மாதம் 1887ம் ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

19ம் நூற்றாண்டிலே இம்மாபெரும் ஆலயத்தின் கட்டுமான செலவினமானது ரூபாய் 160.000.00 எல்லையையும் தாண்டியது. இந்தப் பெரும்தொகையானது அப்போது வாழ்ந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாலும், மீனவர் சமுதாயத்தாலும் பங்களிக்கப்பட்டது.

1887ம் ஆண்டு கொழும்பு பேராயர் பொன்ஜுன் (Arch Bishop Bonjean) அவர்கள் இத்தாலியில் இருந்து புனித லூசியாவின் ஒரு எலும்புத் துண்டை, இத்தாலியின் திருப்பண்டகத்தில் (Reliquary of Italy) இருந்து இங்கு எடுத்து வந்து இவ்வாலயத்தில் பிரதிற்சை செய்வித்தார். 1895ம் ஆண்டு வட திசைநோக்கிய அரைக்கோள குவி மாட (Northurn tlemispherien Dome Shaped) வடிவில் அமைந்த ஓர் தேக்கு மரத்தினாலான பிரசங்க மேடையொன்று பீடத்தின் கிராதியின் அருகில் வலது பக்கத்தில் அமைக்கப்பட்டது. இது மிகவும் உயரமான பிரசங்க மேடையாதலால் கிராதியின் உட்பக்கம் 10 படிகள் அளவில் ஏறிச்செல்ல வேண்டும். பேராயரின் இருக்கை சிம்மாசனம் (Episcopsl throrne) 1897ம் ஆண்டு பீடத்தின் இடது பக்கத்தில் அமைக்கப்பட்டது. சுத்தமான வெண்கலத்திலான நான்கு மணிகள் பிரான்ஸ் தேசத்திலுள்ள மார்செய்ல்ஸ் ((Marseilles) நகரில் இருந்து கொண்டு வரப்பட்டு 13ம் திகதி டிசம்பர் மாதம் 1903 அன்று அனைவருக்கும் திருமுழுக்கு அளிக்கப்பட்டு நிறுவப்பட்டது. அவைகளின் விபரமான எடையும் திருமுழுக்கு பெயர்களானவை:

(1) அந்தோனி தோமாஸ் (4300 இராத்தல்),

(2) கொன்ஜ்டன்ட் ஹென்றி லூசியா எமிலீயா (2000 ராத்தல்)

(3) பிரான்சிஸ் தெரேஸா (1400 ராத்தல்)

(4) ஜுன் ப்படிஸ்ட் எட்வர்ட் அனா (950).

இப்பேராலயமானது டிசம்பர் மாதம் 13ம் திகதி 1938ம் ஆண்டு பேராயர் பொன்ஜீனினால் புனித லூசியாவுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

இப்பேராலயமானது சிலுவை வடிவில் அமைக்கப்பட்டது. அதன் நடுப்பகுதி நீளம் 228 அடிகள், இரு பக்கங்களும் அகலம் 17 அடிகள், உயரம் 151 அடிகள், அதன் முன் பகுதி முகப்பின் மேலே பிரமாண்டமான 07 திருச்சுரூபங்கள் உள்ளன. அவையாவன நடுச்சுரூபமாக 'விண்ணேற்பு மாத' (ஆலயத்தின் முதல்பெயர்) மற்றும் புனிதர்களான இராயப்பர், லூசியாள், சூசையப்பர், அந்தோனியார், பிரான்சிஸ் சேவியர், சின்னப்பர் (பவுல்), ஆகியோராவர். அதற்குக் கீழே பரிசுத்த திரித்துவத்தை நினைவு படுத்தும் ஓர் முக்கோண அமைப்பு.

அடுத்த இதழில் சந்திப்போம்

**ஆலயம் அறிவோம் என்ற இப்பக்கத்தில் உங்கள் ஆலயங்களைப் பற்றிய வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற விரும்பினால் எமக்கு எழுதி அனுப்புங்கள் அதற்கேற்ப தகுந்த புகைப்படங்களையும் அனுப்பி வையுங்கள்.**

2010 - 2020
ஞான ஒளி GNANA OLI

## 01 நாசகார சக்திகளின்...

இவ்வாறு நடக்கவில்லையென்றால் முழு இலங்கையிலும் இரத்த ஆறு ஓடுவதை தடுத்திருக்க முடியாது. இந்த நாசகார சக்திகளின் செயல்பாட்டினால் நாம் அழிந்து விடவில்லை. ஆழமான ஆன்மீகப் பயணத்தில் உள்ளாகினோம். எமது விசுவாசத்தன் விளிம்பை புரிந்துக்கொள்ள எம்மால் முடிந்தது. பொறுமை, கருணை, இரக்கம் போன்ற உன்னத பண்புகளை எமது வாழ்வில் நெருங்கி அனுபவிக்க முடிந்தது. நாம், இந்த கொடூர பாதகத்தைச் செய்தவர்களில் வைராக்கியம் கொள்ள மாட்டோம். இறைவனின் பெயரால் ஆயுதத் தாக்குதல், போர், குண்டுத் தாக்குதல் போன்ற தாக்குதல்களை நடத்துமாறு எந்த புத்தகத்தில் எழுதியுள்ளது? இவ்வாறான அழிவுகள் இறைவனின் பெயரால் அல்ல, சாத்தானின் பெயராலேயே செய்ய முடியும். இது மதம் அல்ல, அரசியலுக்குரியதாகும். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் எனது மக்கள். நீங்கள் பயப்பட தேவையில்லை. உங்கள் துக்கத்திலும் மகிழ்ச்சியிலும் நான் உங்களுடன் இருப்பேன். உங்களுக்கு ஏற்பட்ட தாக்கத்திலிருந்த உங்களை விடுவிக்க நாம் பாடுபடுவோம். காயப்பட்டவர்களை, பாதிக்கப்பட்டவர்களை எவ்வளவு காலம் சென்றாலும் கொழும்பு ஆயர் இல்லம் உங்களுடன் இருந்து உங்களை கவனிப்போம் என நான் உறுதியளிக்கிறேன். இத்திருப்பலியில் 'செத்சரண', கரிட்டாஸ், இயக்குனர் லோறன்ஸ் ராமநாயக்க அடிகளாருடன் மறைமாவட்ட சமூக தொலைத்தொடர்பாளர் பற்றிய தேசிய இயக்குனர், கட்டுவாபிட்டி பங்குதந்தை, மேலும் பலரும் கலந்துகொண்டனர்.

உங்களது விளம்பரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி : cgnanaoli@yahoo.com

## 01 கொழும்பு கொச்சிக்கடை...

காரணம் இயேசுவின் இறப்புக்குப் பின்னர் தாம் மக்கள் இயேசுவைப் பற்றி அறியத் தொடங்கினார்கள். அவர் எங்கே பிறந்தார் எனும்போது தான் பெத்லகேம் சிந்தனைக்கு வருகின்றது. இயேசுவின் துன்பத்தில் ஆரம்பமாகி இன்பத்திற்கு கொண்டு வருகின்றதைப் போன்று நாமும் துன்பத்தில் இருந்து இன்பத்திற்கு வருகின்றோம். அன்று இயேசுவின் காலத்தில் ஒரு நட்சத்திரம் மாத்திரமே தோன்றியது. ஆனால் இன்று இவ்வாலயத்திலும், கட்டுவப்பிட்டிய தேவாலயத்திலும் பல நட்சத்திரங்கள் வீற்றிருக்கின்றன. அவை இறந்துபோன ஆன்மாக்களின் நட்சத்திரங்களாகும். இவ் நட்சத்திரங்கள் எம்மை ஆண்டவரிடம் அழைத்துச் செல்லும் வழிகாட்டிகளாக இருக்கின்றன என்று கூறினார்.

**தகவல் : அன்தனி நிஷான் பூபாலராயன்**
**விசுவாச உயிரூட்டல் குழு**

## 10 விவிலிய வினா விடை

148. இயேசு தோற்றம் மாறினார் (9:2)
149. எலியாவும், மேசேயும் (9:4)
150. பேதுரு (9:5)
151. 03 கூடாரங்கள் (9:5)
152. என் அன்பார்ந்த மகன் இவரே, இவருக்கு செவிசாயுங்கள் (9:7)
153. இறந்து உயிர்த்தெழுதல் பற்றி (9:10)
154. வலிப்பு (920)
155. சிறு பருவமுதல் (9:29
156. ஊமை செவிட்டு ஆவியே..., இவனை விட்டுப் போ (9:25)
157. இறை வேண்டுதலினால் (9:29)

**புதுவருட நல்வாழ்த்துக்கள்**




## ஆண்டின் இறுதிநாளில் திருத்தந்தையின் டுவிட்டர்



"கிறிஸ்து பிறப்பு காட்சியின் முன் நிற்பதும், ஆண்டவருக்கு நம் வாழ்வை கையளிப்பதும் அழகானது. நாம் அன்புகூரும் மனிதர்கள் குறித்தும், நிறைவுறும் ஆண்டினைக் குறித்த நம் மதிப்பீட்டையும், எதிர்வரும் ஆண்டைக்குறித்த அக்கறையையும் அவருடன் பேசுவது அழகானது"

**அன்னை மரியாள் இறைவனின் தாய் புத்தாண்டு பெருவிழா**

மனித வாழ்விலே, நாம் இறைவார்த்தையை கேட்பதோடல்லாமல், இரசித்து, ருசித்து, அனுபவித்து, ஆண்டவரின் அருளோடு, வினாக்களுக்கு விடை தேடுகின்றபோது, பிறக்கின்ற இப்புத்தாண்டில், நல்லவை நடக்கும்.


# மகாகல்கமுவ

## புனித யோசப்வாஸ் அடிகளாரின் தேசிய யாத்திரை ஸ்தலத்தின் வருடாந்த திருவிழா

2020 ஜனவரி 15 காலை 9.00 மணி



வருடாந்த திருவிழா திருப்பலி (தமிழ் சிங்கள மொழிகளில்)
எமது மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஹரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகையின் கௌரவ அழைப்புடன்
இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய க்ளீடஸ் பெரேரா ஆண்டகையால் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கொடியேற்றம் மற்றும்

| | | |
|---|---|---|
| முதலாம் நவநாள் | 2020.01.11 | மாலை 4.00 மணி |
| இரண்டாம் நவநாள் | 2020.01.12 | மாலை 5.00 மணி |
| மூன்றாம் நவநாள் | 2020.01.13 | மாலை 5.00 மணி |
| மாலை ஆராதனை | 2020.01.14 | மாலை 6.30 மணி |
| திருவிழா திருப்பலி | 2020.01.15 | காலை 9.00 மணி |

உட்புகும் பாதை

கொழும்பு நீர்கொழும்பிலிருந்து
கிரிவுல்ல ▸ கழுகமுவ சந்தி ▸ வாரியபொல ▸ பாதெனிய ▸ தலதாகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ

கண்டி குருணாகலிருந்து
குருணாகல் ▸ வாரியபொல ▸ பாதெனிய ▸ தலதாகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ

யாழ்ப்பாணம் மன்னாரிலிருந்து
அநுராதபுரம் ▸ தலாவ ▸ தம்புத்தேகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ

புத்தளம் சிலாபத்திலிருந்து
ஆனமடுவ ▸ நவகத்தேகம ▸ நான்னேரிய ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ

(50225)

யாத்திரை ஸ்தல பரிபாலகர் அருட்பணி அலெக்ஸ் ஜானக, புனித யோசப்வாஸ் மன்றம், பங்குமக்கள்
தொலைபேசி இலக்கம் 077 0665616 / 037 2253095 / 0373126565

# கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலத்தின்
# 152 வருடாந்த திருவிழா 2020

**கருப்பொருள் : "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்..."**



# 20 தை 2020

**05ஆம் திகதி – ஞாயிற்றுக்கிழமை : காலை 6.30 மணிக்கு திருப்பலி**
பங்கில் இறந்த விசுவாசிகளுக்காகவும்,
தியாக உள்ளத்தினருக்காகவும்
கல்லறை பூமியில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**11ஆம் திகதி – சனிக்கிழமை : மாலை 4.00 மணிக்கு கொடியேற்றப்படும்.**
**: மாலை 6.15 மணிக்கு புனித செபஸ்தியார் திருத்தலத்தின் கிணறு ஆசீர்வதிக்கப்படும்.**

**11 – 18ஆம் திகதி வரை : மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலை மற்றும் பிரார்த்தனை**

**15ம் திகதி புதன்கிழமை (தைப்பொங்கல் தினம்) : நோயாளர்களுக்கான ஆசீர் வழங்கல்**
காலை 9.00 மணித்திருப்பலியும் அதனைத்தொடர்ந்து
நோயாளர்களுக்கான ஆசீர்வாதமும் நடைபெறும்.




## மாலை ஆராதனை

**19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு**
**கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்**

**மேதகு. J.D. அந்தனி**
**ஆண்டகையின் தலைமையில்**

## திருநாள் – 20ம் திகதி திங்கட்கிழமை திருப்பலிகள்

**காலை 4.00 மணி, 5.00 மணி, 6.00 மணி – சிங்களம்**

**காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி**

**கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்**

## மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில்

**திருவிழா திருப்பலியின் பின்னர் திருச்சுரூப பவனி இடம்பெறும்.**

### ஏனைய திருப்பலிகள்

**முற்பகல் : 10.00 திருப்பலி – தமிழ்**
**முற்பகல் : 11.00 திருப்பலி – சிங்களம்**
**மாலை : 5.00 திருப்பலி – ஆங்கிலம்**

**மாலை : 6.00 திருப்பலி – சிங்களம்**
**இத்திருப்பலியானது திருத்தலத்தில் உள்ள குருக்களின் தலைமையில் நடைபெறும்.**

**மாலை 7.00 திருப்பலி – சிங்களம்**
**இவ் இறுதித் திருப்பலியானது கந்தானை வட்டாரத்தில் உள்ள குருக்களினால் ஒப்புக்கொடுக்கப்படும்.**

**மு.கு :**
**11ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை**
**தினமும் மாலை 7.00 – 9.00 மணி வரை**
**பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.**

## அனைவரும் வருக! புனிதரின் அருள் பெறுக.

**அருட்பணி. நிஷாந்த றொட்ரிகோ, திருத்தலபரிபாலகர்**

(50222)

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்